ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வெண்மணி

நாராயணபாரதியாரால் செய்யப்பட்ட

மணவாள நாராயணசதகம் என்னும்

# திருவேங்கட சதகம்.

இஃது

கோகுலாபுரம்,

அருணஜலமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டபிரதிக்கிணங்க

## தி. இரத்தினமுதலியார்.

அண்டுஸன் அவர்களாற்றமது

சென்னை

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

இதன்விலை அணா 2

யாவரும் வாசிக்கவேண்டிய புஸ்தகம்.

கருணைப்பிரகாச சுவாமிகள்

சிவப்பிரகாசசுவாமிகள் வேலையசுவாமிகள்

ஆகிய மூவரும் செய்தருளிய

தென்கைலாயமெனகிற

# சீகாளத்திப்புராணம்

மூலமும்-உரையும்.

விலை ரூபா. 2 8 0

அன்பர்காள்! இப்புராணத்தைப் படித்துப் புஸ்
தகத்தை மார்பில் வைத்துக்கொண்டு காளத்தி க்ஷேத்தி
ரத்திற்குப்போய் அருள்நிறைந்தபரஞ்சோதியம்மையை
யுங் குடிப்ராசந்ந பரமசிவமும் யோகக்ஷேமந்தர வி
ஜயமாயுமருகு ராமாய்க் காணலாம். இதனெல்லோரினை
விரும்பத்தேசபூ பேப்படி சுவாமிகளால் எழுதப்
பட்டு ஆதிமப்ரசாக்கான புஸ்தகங்கள் இல்லாமல் வந்
திருந்து இதை ஒருதாய்வாசித்தால் இதல்ல உண்டா
குமபனை உபகாரகமே விளக்கும் புஸ்தகத்திற்கு
முத்தூசாஸ

இப்படிக்கு,

ம. ஆர் வெங்கடேசமுதலியார்,

நெ. 31 முத்துகிருஷ்ணசெட்டி தெரு,

பீகட்டியாடிவேபாலஸி மதுரை

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மணவாளநாராயணசதகம் என்னும்

# திருவேங்கடசதகம்.

## காப்பு.

செந்திருவாழ் மார்பன் றிருவேங்கடசதகம்
பைந்தமிழா லீதிநெறி பாடவே—வந்தருளும்
கார்முகமஞ் சங்கத்தான் கைத்தா மரையணிந்த
கார்முகமஞ் சங்கத்தான் காப்பு.

## தனியன்.

ஒங்குதண்டலைகுழு மேகமணிதேன்சொரியு
மோமலூர் வேங்கைபூப
னுதவுமணவாளநா ராயணன்களமூரி
னுலகநீதிக் கேட்சமுன்
தேங்குநீர்வயல்சூழும் வெண்மணியில்வாழுமுயர்
செல்வன்முத் தாரையனோர்
செழுந்தவமுதித்தநா ராயணப்பாரதித்
திருவேங்கடச் சதகமே
பாங்குபெறுமுலகுளோர்க் கிருகண்பணியகவிருட்
பானுவிரு வழிவிழியதாம்
பவக்கடல்கடக்கவரு வங்கமாம்பொங்குமொழி
பரவுமெய்ஞ் ஞானவழியாம்
சங்கிதபாத்திணைய சாமிதைப்படிப்பவர்க
ளியல்வேங்க டேசரன்ற
னிசையருளையுற்றுநல மேபெருகிவாழுமவ
ரெழுபொன்மலை போல்வாழ்வரே.

நூல்,

## கடவுள்வாழ்த்து.

பூமேவுதிசைமுகனை யுந்திதனிலீன்றதும்
புகிதிவே தாகமமெலாம்
புருஷோத்தமன்றெய்வ மென்பதும்பூசுரர்கள்
புரியுமந் திரகருமமும்
தேமேவுமலர்மங்கை மார்பில்வளர்சீருஞ்
செகந்தனைக் காத்தருள்வதுந்
தேவர்முதன்மிர்கசெந்து பட்சிசிலைமாமுஞ்
செழிக்கப் பதந்தருவதும்
பாமேவுபொருளலங்காரஞ் சிறப்பதும்
பலவிதமு நீயென்றதாற்
பரதெய்வமுண்டென் றிருப்பார்களென்னூல்
படித்தவிதமோ தெரிகிலேன்
மாமேவுபைந்துளப மாலையணிமார்பனே
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## அந்தணர்சிறப்பு.

சீலமிகுமாகம புராணமனுநீதியுந்
தேர்ந்துமெய்ஞ் ஞானநிறைவார்
செய்கின்றயாகாதி மந்தரகருமங்களாற்
றேவர்க்கு முதவிசெய்வார்
காலமுதலாகிய ப்ரமாணங்களங்கையிற்
கனிபோல வேகாட்டுவார்
காயத்ரிமகிமையாற் சகலதீவினைகளுங்
கனலிட்ட பஞ்சுசெய்வார்
ஞாலமிசைதிங்கண்மும் மாரியுங்கொற்றவர்
நடாத்துசெங் கோல்வளமையு
நாடுகள்செழிப்பதுஞ் சகலதருமமும்வேத
நாயகர் மகத்துவங்காண்

# திருவேங்கடசதகம்.

வாலகருடன்பண்டு கண்டகதையல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## அரசர்சிறப்பு

சீருலவுமனுநீதி மந்திரிசொற்றன்புத்தி
தேசத் தியற்கைநான்குந்
சேர்ந்துசெவிவிழிமனது மூன்றினும்பொருமை
சேர்ந்துசெங் கோல்செலுத்தித்
தாருலவுகமலமுங் குமுதமுங்காலங்கள்
சார்ந்துமலர் கின்றவிதமுந்
தந்தியொடுமுதலொரு நான்பலமுங்கண்டு
தரிபலரை வெற்றிகொண்டு
பாருலவுசெடிசேனை தனதானியஞ்சகல
பாக்கியமு மிகவிளங்கப்
பற்பலதன்மங்களோடு கீர்த்திப்ரதாபம்
படைத்திற லோனரசனும்
வாருலவுதனமங்கை மணமகிழுநாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## வணிகர்சிறப்பு

திடமுடன்றன்மன தறிந்துவாணிபதே
செய்வரா தாயமிஞ்சிச்
செலவுசெய்பார்யாவர் வருகினுங்கண்டபடி
தேர்ந்துவிலை போலுரைப்பார்
அடகுதந்தாலுமரி யாதையில்லாருக்
கரைக்காசு கடனுமுதவா
ரனமனுநீதியுடை யோர்களுரைவாய்மையா
லளவிலர்ப் பொருள்கொடுப்பார்

# திருவேங்கடசதகம்.

கடுகுதனிலெட்டிலொரு கூறுவரவெனினுங்
கனக்குமுறை தன்னில்வருவார்
காரியவிசேஷமதி லொருகோடியுதவுவார்
கருணைவர்த் தகர்பெருமைகாண்
வடமலைதிணம்பாவு தென்மலைக்கதிபனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## வேளாளர்சிறப்பு

அத்தனைக்கன் கருமமுஞ் சகராசர்புசபலமு
மவனிவர்த்தக லாபமு
மனைவாக்குமென்மையுந் தருமமுந்தானமும்
மன்புமுங் கையரின்பமும்
புத்திதெளிவியமமுஞ் சாத்திரமுமாகம
புராணமொடு சகலகலையும்
பொய்யாதவுண்மையுங் கீர்த்திப்ரதாபமும்
புகழ்கின்ற தேவர்திலையும்
விக்கைதபுரிமானமுங் குலமரபுகீர்த்தியும்
விதரணமுதற்சகலமும்
வேளாளர்குவலைபுனை காராளர் தங்களுடை
மேழியின் பெருமையன்றோ
மக்தரமெனுமப்புய சவுந்தரமுகுந்தனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## புருஷராய்ப்பிறந்தோர் பெரும்பயன்

புருஷராய்ச்சனனமெடுத்தபேர்மெய்ஞ்ஞான
போதத்தை யறிவதொன்று
பூமியோபிச்சதன வாறுவதொன்றலது
பூவலஞ் செய்வதொன்று

# திருவேங்கடசதகம்.

தருமவானென்றுமிகு கீர்த்திமானென்றுநற்
சற்குண விவேகியென்று
சகலருஞ்புகழ்கின்ற வித்துவானென்றுரண
சங்க்ராம வீரனென்று
கருணைசேரிங்கவகை யில்லாதமனிதரைக்
காசினியிலென்படைத்தாய்
கருதுதாயுதரமும் பார்க்கின்றபேர்களிரு
கண்களுந் செய்தவினையோ
மருவலாகிய துளப மாலையணிமார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## நகரச்சிறப்பு

பரதவிதப்பல வேசியர்களாடலும்
பாடலும் பெறுகோயிலும்
பலவாவிமண்டபங் கோட்டையரணங்களொடே
பலர்மேவு கடைவீதியும்
இரதகஜதுரகப்பதாதிசதுரங்கபல
மேற்கின்ற தளகர்த்தனு
மெண்ணமிகுமந்திரிப்ர தானிதானபதிய
ரியவுத்தி யோகசனமும்
விரதமறையோராதி நாற்குலமுமொன்றென்று
மிக்கசோடச தானமு
மேலாய்ச்சமீபித்த நதியுமாய்மருவுதி
வேந்தனும் பெறுபட்டணம்
வரதருறைசீரங்க பட்டணமெனச்சொல்வர்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராய(

## அரசர்க்குரியதொழிலாளரியல்பு

காரியாகாரியங் கொற்றவர்தெரிந்திடக்
கண்டுசொல் வோன்மந்திரி
காலமுந்தன்பலமு மெண்ணியிகல்வென்றிடக்
கருதுவோன் றளகர்த்தனும்
சீரியதனங்களொடு ராச்சியஞ்சகலமுந்
திட்டமிடுவோன் ப்ரதானி
செய்யவாசகதாட்டி யவதானவக்கணை
சிறக்குமவ னேராயசன்
சூரியன்றிசைமாறி னுந்தான்றொடுத்தவத்
தொகைவிடான் கருணீகனுஞ்
சொல்வன்மைசபைவன்மைபாராசர்வன்மைதெ
கமுகனே தானுபதி
மாரியதுகாத்தருளு மணிமேகவண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## இதனுலிஃதுளதாமெனல்

அதிகாரமதுவந்து சேரிலெவருக்குமே
யதிகவல் லமைகளுண்டா
மாடையாபரணங்கள் சேரிலெவருக்குமே
யழகுபெறு வளமையுண்டாம்
நிதிமேவுசெல்வது சேரிலெவருக்குமே
நிறைகின்ற மேன்மையுண்டாஞ்
நெஞ்சமகிழ்விதரணஞ் சேரிலெவருக்குமே
நிலைபெற்ற கீர்த்தியுண்டாம்
துதிமேவுபத்தியது சேரிலெவருக்குமே
தோன்றவரு தெய்வமுண்டாஞ்
சுகமிக்கபருவமது சேரிலெவருக்குமே
துய்யமண வாசையுண்டாம்

மதிசேரிலங்குமுத மலராதிருக்குமோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬

## அரசரிடத்துப் பெறத்தகும் வரிசைகள்.

சுற்றமொடுதாலுகம் பினபேருமின்பமாய்ச்
சுகமுரிற் புரவியமையுந்
துய்யதருமங்களொடு கீர்த்திப்ரதாபந்
துலங்கிறைற் சிவிகையமையும்
கொற்றவர்கண்மெச்சவே பராசர்கொடிவெற்றி
கொண்டுவரி லாணையமையுங்
குறையொன்றிலாமனிறை புகழ்பெற்றவீரர்முன்
கூறுங்கை வாளமமையும்
உற்றவகையிவையெலாம் வேந்தர்சன்மானமுட
னுதவாமலே பெற்றிட
லுறைகொண்டநாடகந் தன்னில்வருகோலமுட
னூர்வலஞ் செய்கோலமும்
மற்றவர்கள்கோலமுஞ் சரியென்றுசொல்வர்காண்
மணவாள நாராயணன
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௭

## பிதுர்வாக்கிய பரிபாலன முதலியவற்றால் வருநன்மை.

தந்தைதாய்வாக்ய பரிபாலனம்புரிவதுந்
தான்சொன்ன படிசெய்வதுந்
தவறுதவிரதமும் பொய்யாவசனமுந்
தானமுங் கனபொறுமையும்
சிந்தைமகிழ்மரபினோர் செய்தொழின்முடிப்பதுந்
தேவதா விசுவாசமுஞ்
செய்ததோர்பாசுரா மன்கவசகுண்டலன்
செயராம ஜெடுவீடுமன்

அந்தமிகுசொல்லரிச் சந்திரன்மாபலி
யடற்கரும னெடுபகீரத
னருளபிரகலாதனிவர் போற்பெருங்கீர்த்தியொடு
மவனிமிசை நீடுவாழ்வார்
வந்தமரர்போற்றவளர் சேஷகிரிவாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. கக

## சூதுமுதலியவற்றால் வருந்தீமை

சூதுபொறுவித்தையும் பரதாரமோகமுஞ்
சோதரன் றனையிகழ்வதுந்
துலங்காதபுத்தியு மடங்காதவார்த்தையுஞ்
சொல்லிச்செயாததிறமும்
தீதுபொறுவஞ்சமு மதங்களும்பிறருடைய
திரவியந் தனிலாசையுஞ்
சிந்தையகமெனுமகங் காரமும்பெற்றபேர்
சீர்நளன் கீசகன்றுன
மீதுபொருவாலிசக ரன்குமரன்சிசுபாலன்
வென்றியுக் கிரன்வில்வலன்
விந்தைபொருதுரியோத னன்றனக்கன்முன்பெற்ற
விதமுற்றிருப்பர் கண்டாய்
வாதுபெறுதானவரை போதுமொருதிகிரியாய்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. கஉ

## சாதிமுதலானவைகளின் குணமே சிறந்ததெனல்.

தடவரையசன் மீது விளைவிலுஞ்சோளமது
சன்னசம் பாவாகுமோ
சந்தனமுப் பாடா திருந்தாலும் வெட்டிமலர்
சாதிமல் லிகையாகுமோ

கடலெலாநிறைவெள்ள மாயினுஞ்சுவைபெற்ற
காவிரியினூ ற்றாகுமோ
காகங்கள்கோடிதொனி செய்தாலுமொருசிறு
கருங்குயிற் றொனியாகுமோ
படர்கின்றபேய்ச்சுரை சொரிந்தபழமுந்திரிப்
பழமதற் கிணையாகுமோ
பகர்கின்றசாதியுங் கனவயதுமேன்மையும்
பலகூட்டமுந் தேகமார்
வடிவதிகமன்றுகுண மேயதிகமென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## செல்வத்தால்வருமுயர்வு

செல்வமதுசேரிலோ வெங்குபேர்வேங்கடத்
திரளாகில் வேங்கடனுமாந்
செயல்கொண்டவேங்கடா சலனுமாமையராந்
திரளைய ரவர்களாகும்
நல்வரிசைகொடுதான டத்திடுங்காரிய
நயந்துதா தாகுமப்பா
னல்லோலையினோர்க்கொ டொப்பமேலொருவசன
நவிலுமுன் கப்பமிடுவார்
சொல்வன்மைவாவென்ற பேர்வாருமென்பார்
சுவாமியாந் தேவரீராந்
துதிபெற்றதேவரீ ரவர்களாங்காலுமுன்
றொழுதெழுந் தருளுமென்பார்
பல்விதம்பெறுபரம லோபியர்கண்மிண்டனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## வறுமையால் வருமிழிவு

துதிக்கின்றபயனையுங் குறைசொல்வடங்கைதாய்
சோகமுற வசைகூறுவார்
அன்பமொடுமனைமெலியும் மேனிவேற்றுருவமாந்
தொலையாத கவலைவளரும்
உதிக்கின்றபுத்தியு மழுங்கிடுங்கல்விபோ
முதரத்தி லதிகபசியா
முறவின்முறை யாருமொரு வார்த்தை சொல்லார்
வுத்தரமு மொருவர்கேளார் [சொன்ன
விதிக்கின்றவுகைத்தி லெல்லாருமிகழுவார்
மிடிவந்து சேர்ந்ததென்றன்
மேன்மையேதறிவேது குலமேதுநலமேது
வித்தையே தெவரறிவர்காண்
மதிக்கின்றவன்பதம் போற்றிலவைசேருமோ
மணவாள நாராயணன்
மணநிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. க௫

## உடனே கண்டிக்கப்படுபவர்கள்.

முடிகொண்டகொலையாளர் களவினோர்சாதிநெறி
முறைமைவழுகின்றதியோர்
மூர்க்கமுழுபகையாளர் வெகுசனவிரோதியர்கள்
மொழிமாறு கோளுரைப்போர்
மிடிகொண்டபேரைக் கொடுத்துளோர்கற்புடைய
மெல்லியரை மேவுமயலோர்
விசுவாசகாதமிகு செய்குவோர்துஷ்டமா
மிருகக்கள் மிக்கபிணிகள்
கடிகொண்டவிஷமுடன் செய்யானவென்னவே
கருதுபன் மூன்றுவகையுங்
கண்டவுடனேபின்னை யெண்ணாதுகண்டித்தல்
கருணைமனு நீதிகண்டாய்

வடிகொண்டதெள்ளமுத மனையகுணசீலனை
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங்கடராயனை. க

பொறாத்துக் கண்டிக்கப்படுபவர்கள்.

கண்டுவிருபந்தனைத் தள்ளுவோர்குருசாமி
காரியக் குறைசெய்குவோர்
காணுமிடத்திற் பழித்துவோர்வஞ்சகங்
கருதுவோர் பொய்யுரைப்போர்
சண்டைகொடுதந்தைதாய் சுற்றமுடனனுதினந்
தவிராத கலகமிடுவோர்
தம்முடையவலுமையா லெளியோர்வழக்கினைத்
தள்ளிய மதங்களுடையோர்
அஸ்திவருதுஷ்டரொடு கூடிவினைசெய்குவோ
ராகுமிவ ரெண்மர்தமையு
மாறுபோன்மூன்றுமுறை கண்டபின்கண்டிப்ப
தரசர்மனு நீதிகண்டாய்
வண்டுலவுகின்றமலர் தண்டுளபமார்பனை
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங்கடராயனே.

என்றுங் கண்டிக்கப்படாதவர்கள்.

தாதாசிவந்தபேர் மிக்கதாளுபதியர்
ஜதிபெற்ற தக்கதாயார்
சொல்லுமாசாரியார் புரோகிதர்புராணிகர்
சுகந்தந்த போகமடவார்
வேதாகமங்கற்ற வைதிகர்தபோதனர்கள்
விகடப்ர சங்கமிடுவோர்
வித்தையாலுயர்கின்ற கவிராஜர்சுந்தரனா
வீர்மா பிணியுயர்க்கேதார்

தீதானவெம்பிணி யடைந்துளோர்வறுமையோர்
சிறுவரொடு தனைநம்பினோர்
செய்யுமிவர்பதினெண்மர் மதியாதகுற்றங்கள்
செயினும் பொறுப்பதல்லால்
வாதாடியெதிர்செய்கை மன்னர்செறியன்றுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. கஅ

இவர் இதனால் வெல்வரெனல்.

வேந்தருடனேவேந்தர் வாதுவரிலோகெடிகொள்
வெற்றிகொண்டே செயிப்பார்
வீரருடனேவீரர் வாதுவரிலாயுத
விதத்தினாலேசெயிப்பார்
போர்ந்திடும்யோகியர்கள் வார்த்தையுசிதத்தாற்
பொருந்தவே வாதுவெல்வார்
புல்லர்க்குவாதுவரின் மரபெலாம்வசைசொலிப்
பொதுவிலக் காற்செயிப்பார்
சாந்தமணிவேசியர்கள் வாதுவந்தாற்பாத
சங்கீதமொடு செயிப்பார்
சரசகவிராசர்பிர சங்கத்தினால்வாது
தன்னைச்செயிப்பர் கண்டாய்
மாந்தளிரைநிகர்மேனி ராதையதிமோகனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ககூ

இக்குற்றத்தாலிதுபயன்படாதெனல்.

செயல்கொண்டமானமது பங்கமானாற்றிரு
செழித்தென்ன மாறிலென்ன
செய்யகுணவின்பரச மில்லாதமங்கையைச்
சேர்ந்தென்ன நீங்கிலென்ன

இயல்கொண்டகீர்த்திமரி யாதையில்லார்களை
யிகழ்ந்தென்ன புகழ்ந்துமென்ன
விடருற்றபோதுதவி செய்யாதபேர்நட்
பிருந்தென்ன போயுமென்ன
கயல்கொண்டவிழியினாள் பேரிளம்பெண்கொங்கை
காட்டிலென் மூடிலென்ன
கருணைகொண்டொருவருக் குரையாதபேர்வித்
கற்றென்ன மறக்கிலென்ன [தை
வயல்கொண்டபயிர்மேனி புயல்கொண்டகளமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௦

இவையெல்லாமளவுபடினுமாசையளவுபடாதெனல்

பொங்குநதிமணலுமா காயத்தினெல்லையும்
பொழியுமழை யின்றிவலையும்
புடவியிசைவருசனமு மடவியிசைவளர்மரமும்
பொருப்பின்மிசை யுற்றசிலைவும்
திங்களுடனுற்றதா ரகைகணமுமுன்பாத
சேவைசெய் வோர்பெருமையுந்
தெரிவையர்கண்பனமுமுனை நினையாதபலமூடர்
சென்மமுங் கடலாழமும்
அங்கசன்கணைபுரியு மோகமுங்கவிராச
ரருள்பெற்ற புத்திகலமு
மளவுகண்டாலுமோ மனிதருறுமாசைதனை
யளவிடக் கூடாதுகாண்
மங்கையிதுலாபுரி மடந்தைமகிழ்நேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௧

## இன்னார்க்கு இதுவில்லையெனல்.

காதன்மிகுகாமுகர் தமக்குமுறையில்லைவஞ்
சகர்க்குமரி யாதையில்லை
கட்டுண்டகள்வருக் குறவின்முறையாரில்லை
கசடர்க்கு ஞானமில்லை
வேதமறிபூசுரர் தமக்கருள்செயாரில்லை
விரோதிக்கு நேயரில்லை
மெய்ஞ்ஞானியர்க்குவரு சாதிகுலமொன்றில்லை
வீரர்க்கு மனபயமில்லை
போதமிகுயோகிக்கு வினைசெய்குவாரில்லை
பொய்யர்முன் சாட்சியில்லை
புலவர்க்குநேயமில் லாரில்லைசெல்வரைப்
போற்றிலா வொருவரில்லை
மாதரெழில்கண்டுமன மகிழாதபேரில்லை
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௨

## இது இவ்வாறாயின் இதுவாமெனல்.

எழுதினதுசொல்வதே ராயரொப்பந்தனக்
கிசையுமவ ளேரம்பையா
மிடர்வேளை யுதவுமவ னேகன்னன்வழிநடைக்
கேற்றதே யுற்றவசுவம்
பழகிமனமறியுமவ னேயூகிமந்திரிநற்
பயர்க்கின்றுநன்மையாம்
பசியிற்கிடைத்ததே யமுதமாந்துயிலினேர்ப்
பட்டதே புஷ்பசயனம
நிழறந்துகாத்ததே கற்பகந்தாகத்தி
னீர்தந்த தேகங்கையாம்
நிறைபிணிதவிர்த்ததே சஞ்சீவிதன்மட்டு
நீச்சுநீ ரேகடலதாம்

## திருவேங்கடசதகம்.

மறைமுழுகிலெழுத்தனைய மெய்யனைத்துய்யனை
மணவாள நாராயணன்
மணத்திருவுறையலர்மேலுறை மங்கைமணவாளனை
வரதவேங் கடராயனை.

### இவர்க்கிது தெய்வமெனல்.

நிதிபுரிலோபியர் தமக்குப்பணங்களே
தெய்வமாங் காமுகர்க்குத்
தெரிவையர்கடெய்வமாந் துஷ்டருக்கென்னிலே
தீமையே தெய்வமாகும்
நீதியுடையோர்க்குப் பயந்தீர்த்திரக்ஷித்த
நேயரே தெய்வமாகு
நீங்காததரித்திரர் தமக்குக்கொடுத்தபேர்
நித்தமுந் துதிதெய்வமாம்
சாதியனைவர்க்குமறையோர்தெய்வமம்புவி
தனக்கரசனே தெய்வமாந்
சகலர்க்குமாசாரியன்றெய்வநாரியர்*
தமக்குநாதன்றெய்வமாம்
மாதவம்புரிஞானியர்க்குநீதெய்வமா
மணவாள நாராயணன்
மணத்திருவுறையலர்மேலுறை மங்கைமணவாளனை
வரதவேங் கடராயனை. ௨௯

### இதுண்டாயினுமிதுவில்லாவிடிற்பயனில்லையெனல்.

எத்தனைபொருட்சுவை யிருக்கினும்பக்திரச
மில்லாத கவிகளென்ன
வெண்கோடிசம்பளந் தருகினுஞ்சன்மான
மில்லாத சேவகமென்ன
சித்ராதிலீலைபல செய்யினுமிதழுணொடு
சேராத சுகமென்ன
செம்பொன்மிகுசெல்வமுண் டாயினும்பயிர்கொ
செயலிலா வளமையென்ன
[ண்ட

வித்தையுளவெல்லாம் படிக்கினுங்குணவினய
மேவாத பெருமையென்ன
மெய்த்துளசியில்லாத நந்தவனமெனவே
விளங்குமென் பார்கள்கண்டாய்
மத்தகசராசன்மகிழ் விசயநரசிங்கமே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௫

இது இச்சிறப்படையினும் பயனில்லையெனல்.

காட்டிலெண்டருஞ்செடி தழைத்தென்னகால்சிரங்
கனியது சிவக்கிலென்ன
கரைநாணலெல்லா மலர்ந்தென்னகாகங்
கழுத்திடை வெளுக்கிலென்ன
ஆட்டின்கழுத்திலதர் நீண்டென்னநீர்ப்பாசி
யதுபச்சை யாகிலென்ன
வற்பருக்கதிகாரம் வந்தென்னபேடிகையி
லாயுத மிருந்துமென்ன
நீட்டமொடுகரடிக்கு மயிர்வளர்ந்தாலென்ன
நீதியறி யாதமூடர்
நிறைசெல்வராயென்ன ஞானமில்லாக்கல்வி
நெறிபோ லிருக்குமென்பார்
வாட்டடங்கண்ணிபுனை கண்ணிமகிழ்கண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௬

கலியுக தோஷம்.

அப்புவியின்மிக்கமெய்ஞ் ஞானியைக்கண்டாலு
மதுவுமொரு வேஷமென்பா
ராகமபுராணமது நூல்விரும்பார்கள்பரி
யாசகதையே மெச்சுவார்

கம்பமிசையொருகோடி கரணமிட்டாலுமது
கண்கண்டவித்தையென்பார்
கற்பனையலங்கார மாக்கவிகள்பாடிலுங்
கற்றவர்க்கெளியவென்பார்
நம்பிவிசுவாசமொடு துதிசெய்யினுங்கள்ள
ஞானமென் பார்களவைபோ
னயந்தகலியுகமகிமை நின்னையுஞ்சிலபேர்
நவின்றுகுறை சொல்வர்கண்டாய்
வம்பவிழ்மலர்ச்சோலை மலையலங்காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௭

அரசரது நன்றியறியாமை.

அரசரைக்கண்டபின் காரியக்காரருக்
கதிகபரி தானமுதவி
யதிகாரமொன்றினைப் பார்ப்பவரிடத்திலு
மதுக்கொட் டிரட்டியீந்தும்
கருதுநிலுவைப்பணந்தனைப் பணங்கண்முன்
கடன்வாங்கி யேகொடுத்துங்
கணக்கர்செலவெழுதார்க ளொட்டார்கடூறுவர்
கடன்காரர் தாமறிப்பார்
விருதுசீட்டுக்காரர் வைவார்கள்கொல்லரோ
வெயிலிடை நிறுத்திவைப்பார்
விதமாகுமவரவர்க ளெல்லாஞ்சபாசென்ன
மெய்யாய் நடந்துகொளினும்
வரிசைபெறுதுரைகளவ ருமைசற்றறிவரோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௮

## கவிவாணரருமை யறிவில்லாமை.

கற்பனையலங்கார மாக்கோவைபாடினுங்
கனவரிசை யொருபச்சடம
கலம்பகங்கூறினொரு துப்பட்டிபிள்ளைக்
கவிக்கென்னி லொருசோமனும்
நற்பொருளிலாவென்னி னூறுமாலைமடலுக்கு
நாணயம தாயொருபணம்
நல்வண்ணமென்னிலொரு சாப்பாயொலைபொ.னி
னன்மைதரு தாப்பூலமாம்
அற்புதம்பெறுகவிக ளென்னிற்பளாபளா
வதிவெகு மானமாகு
மப்படியுபாயிரத் தொருவரென்றுலெங்க
ளருமையெவ ரறிவர்கண்டாய்
மற்பொருதபல்லரொடு முற்பொருதவீரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨.

## இதனையிவரன்றி யிவரறியாரெனல்.

சீர்த்தனைகளின்மகிமை பாகவதரல்லாற்
சிரிக்குறவர் தாமறிவரோ
சீர்த்திப்ரதாபமது வித்ரணிகரல்லாது
செட்டலோ பியரறிவரோ
சேர்த்தமருவிக்யான நீதிமன்னவரலாற்
சிலைவேடர் தாமறிவரோ
செய்யபகவற்கீதை மெய்ஞ்ஞானியல்லாது
செம்படவர்களறிவரோ
கோத்தமணிமாலையை மங்கையர்களல்லாற்
குரங்குகண் டாலறியுமோ
கொக்கோகமகிமைதனை நாகரிகரல்லாது
கூறுமேபடிக ளறிவரோ

வார்த்தையுசிதத்தைமந் த்ரிகளன்றியறிவரோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௩0

பயனில் சொல்லினிழிவு.

ஆகமென்றுதன்னைப் புகழ்ந்தபேயுந்தந்தை
யன்னையர் வருந்தவுழறவே
யயலார்தமர்குறவு பேயுமடவார்புத்தி
யனுதினங் கேட்டபேயும்
சுகமென்றுபொதுமாத ரைக்கூடிமனைவியைத்
துயரமே செய்தபேயுந்
துணைந்துரணைகளமற்று முறிகின்றபேயுமுன்
சொன்னதில்லை யென்றபேயும்
செகமன்னராமென்ற தலையென்றபேயுமியல்
செய்ந்நன்றி கொன்றபேயுந்
திரளானசபையினிற் பயனிலாவார்த்தையுரை
செய்கின்ற பேய்க்குநிகரோ
மகமென்றுகோசிக னழைக்கமகிழ்தூயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௩௧

எல்லைக்கடந்தலின் வருமிழிவு.

அரசர்மேலாணைதனை யெண்ணுதகுடிகளு
மாதாய மிஞ்சசெலவு
மன்புடையபேர்புத்தி கேளாதகோபமு
மனைவக்கடங் காதநாவும்
சரசவகைமிஞ்சவே வந்தபரிகாசமுந்
தனைமிஞ்ச தொழிலாளருந்
தயிரியந்தனைமிஞ்ச கவலையுஞ்சாகுநியோர்
தமைமிஞ்ச முறைவழக்கும்

காசரணவவயவந் தனைமிஞ்சுதேசமுங்
கவியின்மிஞ் சியவெழுத்துங்
கருதுமுறைகேளாத மனையாட்டிபுனர்நாய
கன்புகழை யொக்குமென்பர்
வாசாசகவிராஜர் புகழ்வேதகுலதிலக
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௨

இவர்க்கு அமுதம் இவ்விடத்தெனல்.

அண்டருக்கமுதமது சொர்க்கத்தில்வேதியர்க்
கமுதமது சொல்லுரையிலே
யானகவிராஜருக் கமுதமணிநாவிலே
யாவினுக் கமுதமுலையில்
பண்டிதர்க்கமுதமது கையிலேவிதரணிகர்
பங்கிலமு தங்கண்ணிலே
பாகவதருக்கமுது காதிலேபரிவுடைய
பாங்கருக் கமுதமனதில்
ஒண்டொடியருக்கமுத மாமதியமென்வே
யுகந்திடுந் தேகமெல்லா
முற்றபெரியோர்தமக் கமுதங்குணத்திலே
யுணர்வுடைய பேர்க்கமுதமோ
மண்டலமளந்தவன் பாதத்திலென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௫

இவர்க்குவிஷம் இவ்விடத்தெனல்.

திருடர்க்குவிடமொரங் கையிலேகாமமிகு
தெரிவைக்கு விடமுலையிலே
தீயபொய்யர்க்குவிட நாவிலேமதமுடன்
திரிவோர்க்கு விடமிதியிலே

கருதரியகோளர்க்கு விடமுதடுவாயிலே
காமுகர் விடங்கண்ணிலே
கட்செவிவிடங்கள்பல் லடியிலேதேட்கெனிற்
கனவிடங் கடைவாயிலே
அரியதுஷ்டர்க்கென்னி லெட்டிமரமென்னவே
யங்கமெல் லாம்விடமதா
மடுத்துக்கெடுத்திடும் பகைவர்விடமனதிலே
யம்பொன்விலை மாதருக்கு
மருவுவிடமல்குலிற் றெரியவசமன்றுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௪

இவர்க்குப்புண்ணிய மிதுவெனல்.

உன்னுடையபதசேவை கண்டுபணிகின்றதே
யுடல்செய்த புண்ணியமதா
முறைகொண்டகிழுரையின் சாரங்கள்கேட்பதே
யுற்றசெவியின் புண்ணியம்
தன்னுடையபுத்திர ரளைந்தசோறுண்பதே
சாற்றுநாவின் புண்ணியந்
தத்துவமுணர்ந்தபெரி யோர்தமைக்காண்பதே
சார்ந்தவிழியின்புண்ணியம்
பன்னுமிரவலர்கேட்கு முன்னங்கொடுப்பதே
பாணியது செய்புண்ணியம்
பதிவிரதமங்கைகுண மிக்கபுருடற்குப்
பலிப்பவே வெகுபுண்ணியம்
மன்னுமிவைமுன்செய்த புண்ணியமதென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௫

## இவர்க்குப் பாவமிதுவெனல்.

திருக்குகற்பனையிலாப் புன்கவிகள் கேட்டதே
செவிசெய்த பாவமாகுஞ்
செயலருமையறியாத பேர்கண்முன்சேவகத்
திரிதல்கால் செய்தபாவம்
பரித்தவுபசாரமா தாவிலார்மனையுணவு
பருகனாவின் பாவமாம்
பாவனையஞ்சுருதி நயமிலாப்பாதமது
பார்த்தல்விழி செய்தபாவம்
தருத்தமிழறியாத பேர்களிடமெற்கின்ற
தகைமைகை செய்தபாவந்
தன்பெயர்விளங்காத பிள்ளையைப்பெறுவதே
தாய்வயிறு செய்தபாவம்
வருத்தயாமுன்செய்த பாவவினையெம்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறைபவர்மேவு மங்கைமணவாளனே
வரதவேங்கடநாயனே. ௫௰

## இவர்க்கிவையுளவேனு மிவைவேண்டுமெனல்.

அதிவீரனென்னினுந் தந்திரவுபாயமுடை
னடையவரை வெல்லல்வேண்டு
மாயிரம்வித்தைகற் றாலுமலர்த்தனி
லடக்கமிருத்தல்வேண்டும்
நதிகோடிநீந்திவந் தாலுமோடந்தனை
நயத்தாரை சேரல்வேண்டும்
ஞானதத்துவமுணர்ந் தாலுமொருத்தனி
னடக்கைதனை யறிதல்வேண்டும்
துர்ச்சோர்குபோசனன் றாலுமொருலாபமுறு
தொழிறுடனிருத்தல்வேண்டுந்
தூயவல்லமையுடைய னெனினுமொருசார்பினுற்
றுரைகளைக் காணல்வேண்டுந்

மதியூகியென்னினும்பெரியற்சொற்கொளல்வேண்டு
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. ௩௭

இவர்க்கிவை வேண்டாமெனல்.

பெற்றதாய்தந்தைகள் சுற்றமேமுதலான
பெரியோரை முனிதல்வேண்டாம்
பின்னொன்றுமுன்னொன்று பேசியேயவமானம்
பேர்கொண்டு திரிதல்வேண்டாம்
உற்றவர்கள்போலவுட் பகையானவஞ்சகரை
யொருநாளு நம்பவேண்டா
மொருவருக்கிச்சையாய்ப் பொய்சொல்லிப்பின்
சபையி லூனமைபோ னிற்றல்வேண்டாம்
சற்றுமேபொறுமையில் லாதவர்கள்சண்டையிற்
றான்போய் விலக்கல்வேண்டாந்
தைரியந்தனில்விக்ர மாதித்தனென்னினுந்
தன்னையே புகழவேண்டாம்
மற்றொன்றுமெண்ணாது செய்யவேண்டாமென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

இவர்க்கிவை பாவமெனல்.

அரசர்வெகுமானஞ்செய் போதுதடைவருகிலோ
வன்றுவிதி பாவமாகு
மானபெரியோர்பழமை யாய்வந்தநேயமதை
யகல்வதே தத்தயோகம்
தருகின்றகாரியங் கைகூடியேபின்பு
தவறில்லை திருதியாகுந்
சற்குணமடைந்துளோ ருத்தமரைமுனிவதே
சந்திராஷ் டமதாகுமாம்

கருதியவிருந்தினுட னுண்ணாதகனியுணவு
காணுமது வேதூரத்தினங்
கலகமேசெய்கின்ற வீணரைக்காண்பதே
கனவாக்ய வேளைகண்டாய்
பரிசுத்தனெனவந்த காசிபகுலோத்துங்க
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௯

இவர் இத்தீக்கோளாவரெனல்.

நரைமக்களைக்கண்டு தங்கள்காரியமெலாஞ்
சொல்லிச்செய் கின்றவேளை
சொல்லெலாம் பொய்யெனவு மிவர்சாட்சிமெய்
யெனவுந் தோன்றுவோ னவலமாகும்
திறமுற்றகல்வியொடு குணமிக்ககவிராஜா
திரளான ராஜசபையில்
செய்யும்ப்ரசங்கத்திலொருபழுதுசொல்லுவோன்
சென்மத்தி லங்காரகன்
அருள்பெற்றவித்தாணிக ரைக்காத்தனேகரு
ளனுசரித் தியல்பாகியே
யவர்கொடுக்குப்போதி லிடர்சொலிவிலக்குவோ
னஷ்டமச் சனியனாகும்
மருவுற்றலர்ந்தவம் புயமணியுமார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௦

இது இவ்வாறாயின் இச்சிறப்பிற்றாமெனல்.

தரணிமன்னவர்சபையின் மெய்க்கின்றவரிசைபெ
றனதுபட் டாபிஷேகஞ்
சபாசென்றுமெச்சிக் கொடுக்குமதிகாரமே
சாம்பிராச்ய போகமாகும்

பரிவுடனினைத்தபடி காரியங்கூடிலது
பதினொன்றி னிற்குருவதாம்
பந்துஜனவர்க்கங்க ளுடனுணவுசெய்கின்ற
பாக்யமே கலியாணமாம்
அரிவைகுணாஞ்சிதம் தாய்வந்துசேருநா
ளென்றமிர்த சித்தயோக
மன்பானபெரியோர்க டரிசனஞ்செய்வதே
யானசுப தினமென்பர்காண்
மரகதம்பூவைமுகி னீலமணிவண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௪௧

மனிதர்களிலே துஷ்டரும் ராக்ஷசரும் பூதரும்

புண்ணியம்பாவமறி யார்மாதவஞ்செயார்
புகல்கல்வி நெறியுமறியார்
புனிதரைப்போற்றார்கள் பரதிரவியங்கொள்வார்
புன்மைசேர் துஷ்டராவார்
எண்ணியொருகாரியஞ் செய்பவர்கள்வலுமையா
லெவருக்கு மிடர்புரிகுவா
ரிரக்கமில்லார்பொய் யுரைப்பவர்வஞ்சிப்பவர்க
ளிவர்கள்ராட் சசர்களாவார்
நண்ணியெளியோர்தமை வெருட்டுவார்வலியவரை
நாடிவஞ் சனையில்வெல்வார்
நாரியர்களெவரையுங் கூடுவார்மிகவுண்பா
நாணமறி யார்பூதர்காண்
மண்ணிலொருமூவடி யிரந்தநெடுமாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௪௨

## மூர்க்கர் முதலியோரியல்பு.

மெய்யானபுத்திபல சொல்லினுந்தன் புத்தி
மேலாகி னென்மூர்க்கனும்
மிக்கபெரியோர்களைத் தாழ்வுசெய்தர்ப்பர்தமை
மேன்மைசெய் வோன்மூடனும்
செய்யாதகாரியந் தெனினும்பிடித்தபிடி
செய்யுமவனே துஷ்டனுந்
திரளானநன்றிபல் செய்தவர்க்கேயிடறு
செய்பவன் மகாபாதகன்
ஐயாவெனப்பணிந் தாலுமேகோபம
தடங்காத வன்குரூர
னானுதினந்தீமைபுரி வோனெந்தநாளினு
மடங்காத சண்டாளனும்
மையார்தடஞ்சோலை திகழ்கின்றகளமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௪௩

## இப்படிப்பட்டவன் இவ்வங்கவீன னவனெனல்.

காதவழியானநதி மாதலந்துதியாத
கயவனே யீனமுடவன்
கைதந்தவோலைவா சிக்கமாட்டாதவொரு
கசடனே மிக்ககுருடன்
நீதிபெறுதன்களவு கண்டவர்க்குத்தரஞ்
செப்பிலா தவனூமையாஞ்
செயலானதன்மகதை யொன்றெனினுமறியாத
செய்கையுடை யோன்செவிடனும்
ஏதெனினுமொருபேர் விளங்காதமேதகம
தெடுக்குமவனேகுருபி
யென்றெனினுமுன்பாத தரிசனஞ்செய்யாத
வீணனே நீசனென்பார்
மாதுசத்தியபாமை தழுவுமணிமார்பனே
மணவாள நாராயணன்

மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங்கடராயனை. ௬௭

உலோபியர் வசை.

நசைபெற்றவேதவே தியர்தமக்குதவா
நவின்றலோ பர்க்குநேயன்
நாற்கவிமொழிந்தகவி ராசர்க்குமொன்றேனு
நல்கிடான் கொஞ்சலோபி
இசைபெற்றகீதமுறை செய்பாடகர்க்குமொன்
றீகிலான் பாதிலோபி
யியலானமட்டோ சர்க்குமொன்றுதவிலா
னேற்றமுக் காலுலோபி
திசைபெற்றகடகவி ராசர்க்குமுதவிலான்
றீயமுழு லோபிநடனஞ்
செய்மாதரபிநயங் கண்டுமொன்றுதவிலான்
சேர்பரம லோபிகண்டாய்
வசைபெற்றலோபியர் தங்கள்கண்டுரவன்
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங்கடராயனை. ௬௮

உலோபியர் வஞ்சப்புகழ்ச்சி.

கண்டபகையாளிமுன் னின்றுபொருதாமற்
களத்திற் புறங்கொடுப்பார்
கன்னமிடுகள்வருக் காடைகளும்பணிகளுநி
காணமே லேகொடுப்பார்
சண்டமாருதமென்ன வருகின்றபகைவர்க
டமக்குமனை யுங்கொடுப்பார்
சவுக்கிட்டடிக்கின்ற மன்னர்க்குவீட்டுத்
தனங்களெல்லாங் கொடுப்பார்
அண்டிவருமெமதூதர் வந்துதான்கேட்குமுன்
னங்கமுறு முயிர்கொடுப்பா
ரவனிமிசையிப்படி கொடுக்கின்றபேர்கடமை
யதிலோப ரென்பதென்னே

மண்டலமும்விண்டலமு முண்டகனிவாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௪௩

உலோபியர் குணமாறுமை.

தேன்கொண்டதுளியொன்றி னாலேழுகடலெலாந்
தித்திக்கவேசெய்யினுஞ்
செய்யபூமலரினால் வச்சிரந்தன்னைச்
சிறக்கவே பொடிசெய்யினும்
கான்கொண்டமலையெலாங் கைகொண்டவெண்ணை
யாற், கனலுற்ற மெழுகுசெயினுங்
கயவர்க்குநீதியும் பேடிக்குவீரமுங்
கபடர்க்கு மெய்ஞ்ஞானமும்
ஊன்கொண்டமூடர்க் கிரக்கமுந்தெளிவுற
வுரைத்துநலமேசெய்யினு
மூமைசெவிடன்குருடன் முத்தமிழ்படிக்கினு
முலோபருக் கீவருமோ
வான்கொண்டதேவர்மொழிமலர்கொண்டபாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௪௪

மக்களிற்பதரரவ ரிவரெனல்.

கொண்டகடன் வட்டியுட னன்றுபோற்குணமாய்க்
கொடுத்துமகி ழாதபதருங்
கூறுபிணைசாட்சிமுறி யுடன்மறித்தாலுங்
கொடாதொளிக் கின்றபதரும்
கண்டவுடனொருகோடி சொல்லிப்பினென்றேனுங்
கருதிச்செயாதபதருங்
காணுமிடத்தினிற் பழிகூறியவரையெதிர்
கண்டுபுகழ் கின்றபதரும்

பண்டொருவர் செய்நன்றி தனையேமறந்துபின்
பழிசொல்லு கின்றபதரும்
பரமாதராசையால் வசைகொண்டபதரும்
பறந்துமிக வுஞ்சிதறவே
மண்டிவருசண்டப்ர சண்டமாருதமான
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬

இக்குற்றமுடையோர்க்கும்
இது செயல்வேண்டு மெனல்.

கதித்திடும்பகைவரென் றாலுமாயத்தினிற்
கண்டுதவி செய்யல்வேண்டும்
கல்வியறியாதசபை யெனினும்ப்ரசங்கங்கள்
கவிராசர் செய்யல்வேண்டும்
விதித்தமுழுமூடரென் றாலுநல்லோர்கண்டு
வித்தைகற் பித்தல்வேண்டும்
வெய்யசினமூர்க்கரென் றாலுநல்லோர்கண்டு
மேற்புத்தி சொல்லல்வேண்டும்
அதிர்ஷ்டமிலையென்னினுஞ் சலியாமன்மிக்கதொழி
லதிலே முயற்சிவேண்டு
மசாத்தியமதான கனரோகமென்றாலுமோ
ரவிஷதம தீவர்கண்டாய்
வதிஷ்டரொடுவான்மீக முனிதுதிசரித்ரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

இதினும் இது மிக்கதெனல்.

சினமுந்திரிந்துதனி யாகியேமிக்கபொரு
ளோடியே வாழுமதினுஞ்
செல்வரொடுதந்தைதாய் சுற்றமுங்கூடிச்
சிறந்துண்ட கூழதிகமாம்
தனதுமரியாதையொடு பெருமையறியாதபேர்
தனமாரி பொழியுமதினுஞ்

சமமானமேன்மைபெறுகின்றபெரியோர்தந்த
தாம்பூல மேயதிகமாம்
கனமருவுபலபல மகாவித்தைதசிலசில
கருத்தொடு படிக்குமதிலுங்
கருணைபெறவொருவித்தை யாயினுங்குறைவறக்
கற்கின்ற தேயதிகமாம்
மனிதர்சிலரிவையன்றி யவையதிகமென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடநாயனே. ௩௰

இதிலுமிது வென்றியெனல்.

மிக்கதுடிகண்டுளம் வெருண்டுகலைமானையே
வென்றசய மாகுமதிலும்
வெஞ்சினமிகுந்துகவ ரும்புலியுடன்பொருது
மெய்கொண்ட வடுவேசயம்
பக்குவமுதிர்ந்தபே ரிளமாதுகொங்கையிற்
பரிவுடன் சேருமதிலும்
பைம்பொன்மணிமாலைபுனை வாலரதியூடலிற்
பாததா டனமேசயம்
தக்கதொருகல்வி யறியாதமுழுமூடர்
சந்தோஷ மாகுமதிலுந்
தமிழருமையறிகின்ற பெரியோர்பழித்தநிந்
தனையதே சயமென்பர்காண்
மைக்குவளைசெங்குவளை வாசமலர்களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடநாயனே. ௩௧

இதுவிதனை வசப்படுத்துமெனல்.

சிந்தைதெளிகல்வியே லோகவசியம்பத்தி
செய்வதே தெய்வவசியஞ்
செய்யுமரியாதையே வித்வசனவசியமாஞ்
செல்வமுற யோர்கள்வசியம்

எந்தவிதமோந்திரள நல்கும்பணங்களே
யின்பவிலை மாதர்வசிய
மெப்பொழுதுமவர்மன தறிந்துகட்டிக்காத்
திருப்பதே ராஜவசியம்
தந்ததண்டனைகளே துஷ்டசனவசியமாந்
தானமே கீர்த்திவசியஞ்
சாந்தகுணநயமாய் நடந்திடுமொழுக்கமே
சகலஜன வசியமாகும்
மந்திரமெழுத்திட்டு மேயுனதுவசியமா
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௨

இச்செய்கையோர் இச்சிறப்புப்பெயர்
கொள்வரெனல்.

சரணென்றடைந்தவர் தமக்குவருவினையெலாந்
தாங்குவோன் புருஷமேரு
தன்னுடையசெய்கைபோலெவரையும்பார்க்கின்ற
தகைமையோன் றெய்வபுருஷன்
திரணமெனினும்பிறர் பொருட்காசையில்லாத
செய்கையோன் புருஷோத்தமன்
தீராதவினைவரினு மற்பரைப்பணியாத
தீரனே புருஷசிங்கம்
பொருளிலாத்தந்தைதா யென்னினுங்கண்டபடி
புகலுவோன் புருஷரத்நம்
போற்றுமவர்மனதிற் குறிப்பறிந்துதவுவோன்
புருஷநாயகமென்பர்காண்
மரபெலாமிப்படி புகழ்ந்தகுணசேகரன்
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௩

இச்செய்கையோர் இவ்வழிபெயர் பெறுவரெனல்.

சற்றெனினுமொருகல்வி யறியாதகயவனே
 தாங்குமுயர் கொண்டபாமாந்
தன்புத்தியன்றிபிறர் புத்தியால்வினைசெயுந்
 தகைமையா னேபதுமையாம்
கொற்றவர்கள்பகையாற் றாத்துண்டுதிரிகுவோன்
 கூகையுற வானபக்ஷி
கோபமதுதந்தையே யன்றிமற்றோரையுங்
 கோபிக்கு மவன்மிருகமாம்
கற்றபெரியோரையெதிர் பணியாதமூடனே
 கைகால் முளைத்தசிலையாம்
கண்டவர்களெல்லாம் பழிக்கின்றகோளனே
 கனதுஷ்ட ஜெந்துவென்பார்
மற்றவர்கணேயமது கனவிலுங்காணாத
 மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
 வரதவேங் கடராயனே. ௫௪

கல்விப்பொருட்சிறப்பு.

தெள்ளமுதமனையகல் விப்பொருள்படைத்திடிற்
 தேசமெல் லாந்துதிக்குஞ்
செயத்தம்பமானபுகழ் நிலைநிற்குமிவையெலாஞ்
 செம்பொன்மிகு செல்வமதுபோல்
வெள்ளமதுகொளுமெனும் பயமில்லைகனலினால்
 வெம்பவரு சலனமில்லை
வேந்தர்கள்பறித்திடக் கூடாதுசோதரர்
 விரும்பினும் பங்குறாது
கள்ளராற்றிருடவும் முடியாதுவரவரக்
 கனமலாற் குறைவுறாது
கருணைஞானந்தழைபு மாகையாலுனையிதய
 சமலத்தில் வைப்பதெளிமாம்
வள்ளலெனவருகின்ற மாடபூசியாதிபன்
 மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௫

கவிதைச்சிறப்பு.

உரைகொண்டுசொல்வரிசை சேர்ந்துபொருளின்ப
வகை யோசைபெற் றேமதுரமா
யுற்றநவரசமுடன் கற்பனையலங்கார
முண்டான யேகவுடமாய்
நிறைகொண்டசீர்தளை விகற்பம்பொருந்திநன்
னீதியாய்க் கடைதுடிப்பாய்
நிறைகின் றசபைதனி லுதாரணமதாகிநிலை
நின் றுபழு தென் றிடாமல்
திரைகொண்டதன்கடலில் வருமமுதபாகமாய்த்
தேசப்ர சித்தியாகச்
செப்புமொருகவிகொண்டு சூலமெலாம்வந்தடிமை
செயினுமது கிரா துகாண்
வரைகொண்டுபொழியுமழை காத்தருளுமையனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே ௫௬

தந்தீவினைப்பயன்.

திங்களுதயங்கண்டு மலராதிருப்பது
செங்கமல முற்றவினையே
தினகரனையெதிர்கண்டு முகைகொண்டுவாடுவது
சேதாம்பல் செய்தவினையே
கொங்குலவுசண்பக சுகந்தமலர்கண்டுமருள்
கொண்டது சுரும்பின்வினையே
கொண்டன்மழைகண்டுள மெலிந்திடவருந்துவது
கோகிலஞ்செய்தவினையே
அங்கணுலகெங்கணு மகிழ்ந்தபெரியோர்களுக்
கருளா திருந்துவிடினு
மவர்மீதுகுற்றமது சொல்வரோசேர்ந்தவ
ரதிஷ்டமென் பார்கள்கண்டாய்

வங்கியந் தருமிசை கனிந்தகனிவாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௩௭

அரசர் கவிவாணர்க்குச் செய்யுமுபசாரம்.

போசனவசந்தமலர் மாலைதாம்பூலம்
பொருந்துவஸ் திரபூஷணம்
புரவியொடுகவிகையுஞ் சிவிகைவரிவாத்தியம்
பூமிமனை தனதானியம்
தூசலவுறுவசமெனும் வெகுமானசோடசந்
தாதரால் வரவழைத்தல்
தோன்றுமுன் னெழுதல்வந் தருள்கெனத் தழுவுத
றுதித்திட விருக்கையுதவல்
நேசவெகுமானங்கள் செய்தெழுதல்வழிவிடுத
னிறையங்கி காரமேழாம்
நெறிகொண்டபுவிராசர் கவிராசர்பாற்செய்யு
நீதிமுறை யென்பர்கண்டாய்
வாசவன்பெருவிசய சூதனெனுநாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே. ௩௮

புல்லர் நல்லோர்குண மறியாரெனல்.

சந்தனவனந்தனி லிருந்துமதன் மணமதைச்
சற்றுமறி யார்கிராதர்
தரளங்குளிக்குமவ ரதன்மாலையணியார்கள்
சங்குமணி தன்னையணிவார்
கந்தமலிதாமரை யடுத்துமண்டுகங்
கருஞ்சேறு தனையருந்தும்
காமருவுதேமாவின் மிசையிருந்தாலுமோ
காகமது வேம்புநுகரும்
அந்தவகைபோலநல் லோர்தமையடுத்தே
யனேகநாட் பழகிவிடினு

மற்பர்த்தாமறிகின்ற தறிவதல்லாமன்மற்
றவர்மகிமை யறிவார்களோ
வந்திகணைந்தன்னி லவர்பெருமையறிகின்ற
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே 59

புல்லரைப் பாடும் புலவர்பயன்பெறாமை

நாவினிற்சொல்லுநய மூங்கண்டுவஞ்சகரை
நட்பென்று வருநேயரும்
நவமதனையொன்னவெழில் கண்டுபேடன்றனை
நாடிவரு மடமாதரும்
காவினிலுயர்ச்சியும் பசுமையுங்கண்டிலவு
காத்திருக்கின்ற கிளியும்
கானலைக்கண்டுபுன லென்னவேயாசைக்கொண்டு
கருகியே யேகுமானும்
பூவினிற்பொலிவுடை மூங்கண்டுகேதகை
பொருந்துதேனுகியளியும்
புல்லர்தஞ்செல்வங்கள் கண்டுறுதிசெய்திடும்
புலவர்செய லொக்குமென்பார்
மாவினிற்குயில்வேளை வாவெனுங்களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. 60

மேலோர்செயல் கீழோர்க்காகாமை.

எந்தவினைசெய்தாலு முனிவோர்கண்மாதவ
மிசைத்தாற் பெருமைபெறுவார்
இகழ்ந்துவசைசொல்லினுங் கவிராஜர்வித்தையா
லென்றுமிகுமேன்மைபெறுவார்
ஏனைதமதமாயொன்று வழுவினுந்துரைகள்செந்
திருவினாற் புகழ்சிறப்பார்
சீரியர்களெப்படி புரிந்தாலுமேற்குமது
சிறுமையோர் செய்யவசமோ

சத்தியநெறிதப்பியே நடக்கினுமது
தன்னைமதயானையென்பார்
தானுமப்பயதலது செய்யிலேபேயென்று
தள்ளுறுமுனிவர்கள்கண்டாய்
மந்திசெரிபிடபகிரி தன்னிலுறைவாசனே
மணவாளநாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 61

இது இல்லையாயின் இதுவிளங்காதெனல்

சந்திரனிலாவிரவு மதுரமில்லாதகவி
துணையிலாதசெல்வஞ்
சற்சனரிலாதவூர் புரவியில்லாதபடை
தளபதியிலாதசேனை
பைந்தொடியிலாதமனை பாடலில்லாவோசை
பத்தியில்லாதபூசை
பார்த்திபரிலாதபட் டணமயூகமந்திரிகள்
பற்பலமிலாதவரசு
கற்பில்லாதமகளிர் சத்தியமிலாதவாய்
கல்வியில்லாததேகம்
பணிவையில்லா தியாகிசுகியில்லாத
கன்மமுறைதேசமில்லா
மார்க்கமிலைவித்வசனமில்லாதசபையென்பர்
மணவாளநாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 62

சங்கீதச் சிறப்பு,

வபுருகெரியாமன்மணிபெயிறுதோன்றுமல்கிழ்
புளாமலங்கசேட்டை
புரியசமன்மிகுதலையை யசையாமன்மிடறுதான்
பொருமிவிம்மாமலியல்பாய்ச்

# திருவேங்கடசதகம்,

கருதிலையகாஞான தீதியொங்கிநினையின்
ஞெனிமேரு தப்பிமையைந்த
ஐம்பதத்திருமேயாசை பிடித்தெனக்கையனைவேசு
தோன்றும விளை... ...
தருமதாரைபுதுபக ... சானிகள்மது
சங்கிதவிக் தவியமறு
சகலாக்கு... ... தாரிமவள்
சாசருணை வஞ்சிலவனிலே
மருவிசிதம்பருக்யனே யானுலிருப்புமோ
மணவாள நாராயணன்
மணிதிருமலையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே

பாதச் சிறப்பு

பாதாளமுஞ்சதி மடங்கபிறுதொளிசெயும்
பண்புபெறு வேனலைக்கனி
பலாகதிகையொடு நாலங்கொள்சனிதம்
பரிசேவிக்க படைகள்
காதாணமென்மணுமுகடமெபாதத்திக்கெழுந்
கன்னுமுடை வோணட்டுவன்
கையின்மெய்ச்சிற்பமும் கைவிழுநிரைமியம்பல்
காட்டுமை நோபதிரம்
சாதாளயமாக்க மாருமிங்கிதழ்ந்து
சொல்லுமலை ஒரியசனம்
ரவதுதிபெற்றகடனப்ப சங்கமதில்வெலுதொனி
தெரியாத சமைபெசனை
தாளமுடனாகியிடையைப்பெபாதனே
மணவாள நாராயணன்
மணிதிருமலையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே

காடகச் சிறப்பு

சுகந்தபரிமளவஸ்தா பூஷணலங்கிருத
சோபெருஸ் திபுவேண்டுக்

தோகையர்களும்பரி சனங்களுங்கூடியே
சொற்படி நடத்தல்வேண்டும்
மிருந்தாஸ்தாரிக் கம்புகேன் முதலான
மேன்மையோ கின்பாசயாம்
வேஷங்களகதமுஞ் பாகியுப்பாஷையும்
வெவ்வே றிருத்தலவேணடுங்
புகழ்ந்தபதமிங்கிதம பரிகாசவிடங்கள்
புண்ணிய சுதாப்ரசங்கம
போற்றுபாவனாமிருமாசதாளஞ்சுருதி
புகழ்ங்கிசை ம பாதங்... மை
மகிழ்ந்திடுஞ்சபைதலை சபையென்றுசொல்வர்காண்
மணவாள நாயனன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வாதவேங் கடாயனே 65

விசேஷ வித்தைச் சிறப்பு

சத்திகணபதிதுர்க்கை சால்வழியோகாளி
சாமுண்டி யென் மொழுகதிச்
சங்கமொடுஜெயகண்டிகை டக்கைகைத்தாளங்கள்
சந்தமொடு மிகமுழங்குக
சித்ரமிகுமாத்திரைக் காலின்முறையங்கமுறை
செப்பிமுறை பத்துமுறைகள்
செய்யுமுறையமைத்து சாதுசஜகரணங்கள்
சேர்ந்தகோ கரணமார்க்கம்
வித்தைபுரிஸ்தம்பன தாதியாபஷ்டாங்க
விதமா மயேந்த்ரசாலம்
மிகுமந்த்ரசாலமுத லான செப்பிடுவித்தை
மேன்மையவர் தந்த்ரநீதி
மந்தகசாரசதே வேந்த்ரனுந்தெரிவனோ
மணவாளநாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வாதவேங் கடாயனே 66

பௌராணிகர்

ஆருக்குமானந்தமாகவே பொருள்சொல்லு
மவனே புராணிகப்புண
ணங்கமொடுகிரகதிலை கணிதமுந்தெரிகுவோ
னருள்புரோ கிதபூசுரன்
சீருற்றசபையெலா மெச்சப்பாதங்கமுறை
செப்புமவனேவித்துவான்
செய்யுமந்திரயந்த்ர தந்த்ரமொடு
சிலனே மந்த்ரவாதி
ஏருற்றகல்விகுண மேன்மைபோதங்க
ளிசையுமவ னாசாரியு
னென்றுமவர்சொற்படி நடந்துபயபக்தியோ
டிருக்குமவனே சீஷனாகும்
மாருக்குவேதாந்த வாசனேநேசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே

மருத்துவ னியல்பு,

திரமானசாஸ்திர முணர்ந்தொருசிகிச்சையது
செய்திட வழைத்தபின்போய்த்
தேசகாலஞ்சாதி தேகங்குணம்பிணி
திறக்குமா றுந்தெளிந்து
கரமானநாடிமுத லெட்டுப்பரிட்சையுங்
கண்டுகளி கங்கியாழுங்
கணகுளிகைபஸ்பமொடு சிந்தூரஞ்சூரணம்
கருதுலேகியதயிலமாம்
பரமானநலமருந்துங்கொடுத்ததிதமாய்ப்
பத்தியமுவெளிதாகவே
பரிவுபெறுமாரோக்கியஞ்செய்துதிராளசை
பகராது பண்டிதனெனின்
வரமானதன்வந் திரிக்குநிகர்செல்வர்காண்
மணவாள நாராயணன்

மலைதிருவுறையலர்மேலுமங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 68

ஈனர்மருத்துவனுக்குச் செய்யுமுறைமை

சேர்க்கின்றநகைரோகமுற்றால்வைத்தியன்
தெய்வமாங் கேட்டதெல்லாந்
தீராதகொடுப்போமென்பர் தீருமிப்பிணியென்று
செப்பினுலன்றுகுருவாம்
பார்க்கின்றகுளிகையதுதந்தபின்
பாதிலருவானபின்பு
பண்பானதுணைவனுரோக்கியஞ்செய்தபின்
பார்க்கின்றமைத்துனனுமாம்
ஏர்க்கின்றமற்றைநாளேயன்மனாளினி
விசச்சகடனுளிமனார
கொதிர்வரிற்பண்கயாளியாருமிப்படியென்று
பீவர்இலருண்டேகண்டாய்
மார்க்கின்றதருவேமொடு வளர்கின்றவள்ளலே
மணவாளநாராயணன்
மனைதிருவுறையலர்மேலுமங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 69

ஆராயாதுசெய்யுமெழுவாடையுங்கதி.

நீதிவழுவாவகை வழக்குரைப்போர்களு
நிறைந்ததிவினைகளெல்லா
நீங்குபரிகாரமுறை செல்குவோருப்பிணி
நிறுத்தவருபண்டிதர்களும்
சோதிடஞ்சொல்லுமபு ரோகிதருமுலகந்
துதித்தசெங் கோல்வேந்தருந்
தூயவுபதேசதேசிகருமவர்சிஷருஞ்
சொல்லுமிவரேழுபேரும்
ஆகமைறநூலுறைசெய்தவிதமாராய்ந்
தறிந்துகிருபாதுசெய்யிலே
வடைக்கலப்பொருளொக்கலர்க்கிடுப்பேசினு
மீதாரட சேடைவர்கண்டாய்

# திருவேங்கடசதகம்

மாதிரநெடுங்கடல் வளர்ந்தநெடுமாயனை
மணவாள நாராயணன்
மணி திருமறையலர்மேவு மங்கைமணவாளனை
வரதவேங்கடராயனை

## நித்தியகருமச் சிறப்பு

கருணைகமிழ்ந்திடவே சந்தியவந்தனமுடன்
அருஜப தவோமமும்
கடவுளோர் பூசையுஞ் செய்துவேதாகமக்
கல்வியது முறைபடித்துத்
தருமத்தியானநற் கருமமாதித்தியொடு
தக்கதுதவம் புரிந்திருடன்
குருஇணைவழிசெய்துமா மாயனைப்போற்றியே
சந்தியாதி கருமங்களி
பரிவுடன் நின்றிருக் கோயிலவலமாகிப்
பணிந்துபத சேவைசெய்து
பண்பானசந்நோர கயத்தின்மலரிணைமீது
பரிபுட சேவமிழ்ந்து
மருவியேவாழுமில் வாழ்க்கையேவாழ்வுதான்
மணவாள நாராயணன்
மணி திருமறையலர்மேவு மங்கைமணவாளனை
வரதவேங்கடராயனை

## குடிவாழ்க்கைச் சிறப்பு

மிக்கதெய்வத்தலமு ஞானகுருபீடமும்
விளங்குமா நதியுமறையோர்
மேவியகிராமமும் நூபிகலைமுந்தனமு
மேலானமுடையநாட்டில்
முக்கனிதருஞ் சோலை நீர்வளக்குடிவள
முயங்குபயிர் வளமுமாய்
மொழிபகைதுறைலமுஞ் சேமிப்பதாயத்தோர்வீதி
முதலாய் விளங்குமிட
அக்கரீதகருவீதியொருபடையில்செலாய்ச்
சார்த்தில் காமணையிற

தனதானியங்கறவைமுதலானசெல்வங்
தழைத்தென் றானமுதவி
மக்கண்மக்களொடு வாழ்வதேவாழ்வுகாண்
மணவாள நாராயணன்
மனதிலிறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 72

மருத்துவர் செல்லத்தகாவிடங்கள்.

தீராதரோகமுடை யோரிடமுமுண்மையது
செப்பாத பொய்யரிடமுஞ்
சீரானவொருவர்பண் டிதமின்றிவெருவிதஞ்
செய்துகொள் வோர்களிடமும்
ஏராதகோபமுறு மூர்க்கமன்னவரிடமு
மேற்றிழையை மனதுபிரியா
விம்பமாமதிவிரக மனகாமுகரிடமு
மெப்படி நலஞ்செய்யினும்
தாராலோபரிட மும்பத்தியத்தனைத்
தாழ்வுசெய வோர்களிடமுஞ்
சகலசனகண்டக ரெனுந்துஷ்டரிடமுமிரு
தனமரியேயொழியினும்
வாராதிருப்பதே பண்டிதர்கணீதிகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே 73

நோய்க்கிடங்கொடார் செய்கை

சனிபுதன்றனிலெண்ணெய் வெந்நீரின்மூழ்குவார்
சாருமிள வெயில்விரும்பார்
தம்வயதின்மேலான மங்கையைச்சேரார்
சதாகாலம் வழியிலைடவார்
பனியிலுங்காற்றிலும் மெய்வருந்தார்மடைப்
பளியிற் சேவசமிரார்

பழங்கறியருந்தா ரிரண்டுடுக்காரொன்று
 பலகால முய்விட்டிடார்
கனியொடுகிழங்குகளை யிருந்துபுசியார்பசி
 கலந்தன்றி யுணவுசெய்யார்
காய்ச்சுபா லுண்பார்நீ யோர்கூட்டுவார்தினங்
 காவேரி தனின்மூழ்குவார்
மனிதரிவரிவர்சொன்ன பேர்க்குநோய்சேருமோ
 மணவாள நாராயணன்
மனதினுறை லர்மேலு மங்கைமணவாளனே
 வரதவேங் கடராயனே. 74

தந்தைமுதலியோராவார் இவரெனல்.

நிலமுடன்றிருகமுஞ் செல்வமுங்கந்துகட
 னினுணையொன் றில்லாமலே
நிறைகல்வியுமைசெய்து நெறியோடுவளர்க்கின்ற
 நேசமே யுயர்தந்தையாம்
தலைம்தியமெனவெ வளர்ந்தபின்செல்வங்கள்
 கண்டுமிக மனமகிழ்ந்து
கருதரியபுத்திரன் போலமருமகளையுங்
 கருணைசெய் பவளன்னையாம்
பலகலையுணர்ந்துமிகு செல்வமுந்தேடிப்
 பகிர்ந்துதன் பேர்விளங்கப்
பண்பான தந்தைதாய்க் குதவியேயவர்சொன்ன
 படிசெய்கு வோன்புத்ரனும்
மலர்பொழிசெழுஞ்சோலை மலைவளருமாயனே
 மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
 வரதவேங் கடராயனே. 75

நற்புதல்வ னியல்பு.

அரிதானமாதவஞ் செய்கின்றமுனிவோ
 ரடைந்திடவ ரந்தனைப்பேர்

லடுத்ததோர் தமைக்காத்து மிக்கமேலவர் தமை
யடக்குமுன் சக்கரம்போல்
பெரியோரிருக்கின்ற சபையினிற்கவிராஜர்
பேசும்ப்ர சங்கமதுபோல்
பேருலகமெய்க்கவரு மனுநீதிமுடிவேந்தர்
பெறுகின்ற மாகீர்த்திபோல்
ஒருகோடிலட்சத்தி லொருவனுடனேவே
யுதித்தசங் கீர்த்தனப்போ
லுபயகுலசுத்தனும் மகீரதன்போலவே
யொருபிள்ளை போதுமென்றல்
மரபெலாமென்னமேன் மையடையுமென்பார்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வடவேங் கடாசலனே. 76

சகோதர ரொருமை,

தனதுபட்டத்தினைத் தம்பியர்க்கீயனத்
தந்ததசி ழுக்கையனுக்
தமையனுர்வருமளவு பரிவிரதமாகவே
தபசுபுரி யுத்தமியும்
அனுசனைப்பாலித்த தாய்தனைப்போலவே
கருணைசெய் திதிமதனியும்
காலுமுன்றந்ததப்போற் றிருவடிகள்பணியுங்
கனிட்டனிட மனையாட்டியும்
தினந்தினம்பரிவாகி யம்மையேயென்றுபேர்
செப்புங் கொழுந்தனுந்
சேர்ந்துவாழ்கின்றபோ தீரேதாயுகந்தனிற்
றெசரதா குமாரர்கண்டாய்
வனசமலர்கமழ்கின்ற வாவிசூழ்களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வடவேங் கடாசலனே. 77

# திருவேங்கடசதகம்.

## வேட்டகத்தியல்பு.

நாரிகைதனைத்தந்த மாமனார்மனைதனிற்
சருகணைமரு மகன்வந்திடிற்
கண்டவுடனுசார வுபசாரமாகவே
கனிருக்குகள் சமைப்பார்
சேருநாள்மூன்றுநி லைமைபட்சத்திற்
செலித்தசக தியோதயம்பேறாம்
தினந்தினப் பெருமைகுறையுங்காரியங்களுஞ்
செய்யெப்ப ரதனைதமூதலோர்
ஆருயிர்மனையோர்கண்மைத் துனர்சரசபரிகாச
மதிகமா மனைவிபெண்ணிலே
வண்புடன்சொன்னபடி கேளாளிதாகவே
லரதிப்பொருகைதயல்லவோ
வாருமென்றவமோக வசனமுஞ்சொல்வர்காண்
வனைவாள நாராயனை
மனதிலுறையலர்மேலுமங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

### மானங்கெட்டுப் பிழைப்பவரிவரெனல்.

நேசமுறுமிருமிதன துறவினன்மருகன்மனை
நிலையென்று வாழ்ந்தபேரும்
நேரிழை தனைத்தந்த மாமனார்மனைதன்னி
னீங்கா திருந்தபேரும்
பேசரியகல்விதெரி யாமூடர்பேரிற்ப்ர
பந்தகவி சொன்னபேரும்
பெருமைபேய்க்கள்ளக் கடன்களைப்பட்டுப்
பிழைத்துயிர் சமைத்தபேரும்
ஏசலருபணையாளர் தங்களைமுறைகட்டி
யேவல்செய் கின்றபேரு
மீனமதுபார்ப்பரோ வயிறுசாணென்றிவர்க்
கென்சாணு வயிறுகண்டாய்

வாசமலர்மங்கைமுடி கொண்டுவளர்களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. 79

கற்புடைய பெண்டிரியல்பு

ஓதுஜபபூசைகட் கினியகுற்றேவல்க
ளுகந்துசெய் போதுகுருவா
முறைகொண்டசரசஞ்செய் போதுமன்மதனு
மொழிந்தவை லோத்தெய்வமாம்
நாதனைக்கருதியவ னுண்டகுறையமுதாக
நவில்வேத யுபதேசமாம்
நதியாடபலநோன்பு தேவதாதரிசன
நயந்தபல விரதமுடன்
பாததரிசனமாக்கொள் சுத்தியாய்ப்புத்தியாய்ப்
பத்தியாய்க் கடவிளுழும்
பாரென் றுகலைவிதுறை செய்கினுஞ் செய்கின்ற
பதிவிரத மார்க்கயானை
மாதர்புகழ்கீர்த்தியே னுதிபெற்றதல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. 80

நற்பெண்டீரியல்பு.

பஞ்சணையுமெருகாக நின்றுவாவெல்றயின்
பரிவினுட னுருகில்வந்து
பாக்கிலைமடித்தருளிக் துமெத்தையில்வந்து
பரிமள மிகத்திமிர்ந்து
கொஞ்சிமலர்சூடியிசை பாடிவிளையாடியே
கொக்கோக விதமறிந்து
கூடியிதமிருவோரு முறையிபருகினியபுட்
குரலோசை மிகமுழங்க

கெஞ்சமகிழ்வொடுசோத கரணகரிகரவுபரி
கேயாதி கேளிதன்னால்
நிறையயிர்சபோகசம் போகமைபொசமுட
னீங்காத மோசமுகவும்
வஞ்சியினலாதுமனம வேறொன்றின்மகிழுமோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௧

## திப்பெண்டூ ரியல்பு.

ஐயருக்கமுதுபடை யென்றுவந்தாய்நீயு
மாண்பிள்ளையென றெண்ணலோ
வரிசியெங்கேபானை சட்டியெங்கேயென்ப
ளவள்சொன்ன வகைகளெல்லாம்
பையவேகொண்டுவந் தாலுசமைக்கப்
படாதுகலை நோகுதென்று
பாயிற்கிடப்பள்சின மாயென்றுபேசினால்
பாருனைக் கேற்றபுத்தி
செய்யவல்லேனென்பள் சற்றடித்தாலஞ்சு
தின்கிறேனை கூகூவெனத்
தெருவிடுதோறுமுறை யிருபெண்டிருண்டெனிற்
றீயகமன் வேறுமுண்டோ
வையகம்புகழ்சோலை மலையலங்காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௨

## பரத்தையரியல்பு.

கொச்சியுறுமஞ்சள்வங் காளமுறுபச்சையிலை
கூறுசன் பகமெட்டுடன்
கூடியநலங்குமஞ் சனமாடிபொற்கண்டை
கொண்டவெண் டுகிலுடுத்தி
கச்சிளங்கொங்கைமேற் சந்தபரிமளகளப
கஸ்தூரி குழம்புமென்னக்

கனகநவரத்னமய பூஷணம்பூண்டுகிளி
கையின்மிசை யேந்திநலமாய்
பச்சைமயில்போலவாதி வேலைக்குமிகுசரச
பரியாச நகைபுரிந்து
பண்பான மேடையுப் பரிகையினிலிருக்கும்
பாத்தையுண் டாவளென்றால்
வச்ரதாரனுலகத்த ரம்பையிலுமதிகமா
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௯

## பிரௌடை வேசையரியல்பு.

ஆசையுடனொருவிதக புருஷன்வந்தான்பிறு
மாசார வுபசாரமா
யாசனங்கனிவெழுந் தருளுமென்றருகிருந்
தழகான வொருகட்டிலே
நேசமொடுதாம்பூல முதவியேயவனுடைய
நெறிகண்டு வரவழைத்து
நீதியாயந்தநாள் வந்தநீர்பின்னெனை
நினைந்திலீ ரென்கொலென்று
பேசரியசங்கீத சரசசல்லாபபர
சங்கமொடு ரதிகேளியில்
பிரியமுடனேயனைந் தின்பமாயுசிதம்
பெறிற்ப்ரௌடை வேசையென்பார்
வாசமிகுபைந்துளப மாலையணிமார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## பாத்தையரிழிவு.

விலைமாதர்வீடுசவுளிக்கடைபடுக்கையது
மேவுமனை போதலம்பலம்
மெத்தையதுசந்தியிற் டாறையவரங்கமோ
மேவியபடித் துறையதாம்

கலைமருவுமவரல்குலோடம்பிருகொங்கை
கடையிலெனு மிச்சமபழம
கனிவாய்படிக்கமிகு தடைகடன்னீர்ப்பந்தல்
கட்டுகத லிக்கம்பமாம்
மூப்லமார்புவாடைக் குகிரைபிடையேணியவர்
மோகமெனி லெட்டிக்கனி
மொழிமுயற்கொம்புசேரிவபுவெங்நோயை
முறைகமயிலைக் கண்டிருந்தும்
மலைவுபெறுவார்களவர் வார்த்தைதக்குநேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௭௯

## சரீர நிலையாமை.

ஆகாயமீதினி லெறிந்தகசிலைகாற்றினை
யடைவைக் கிடுதருகதி
யனலிட்டமெழுகுவயி லிடையிட்டவெண்
ணெய்சுழியாற்றிடை யெழுந்தகுமிழி
மோகவிகாரமொடு வருகின்றமின்னல்விழி
மூடுதுயில் கண்டகனவு
மோதிவருகாற்றினிற் றீவிழுந்திடுபஞ்சு
மூச்சோடு கின்றபதுமை
மீகாமனில்லாத கப்பல்கண்ணிமைபோல்
விளங்குவரு தேகமிதனை
மெய்யென்றுமெய்யெலாம் பொய்யென்றுதிரிகின்ற
விழலனென யாளநினைவாய்
மாகாளமுகிலனைய மெய்யனே துய்யனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௦

## நல்வினைசெய்வார்பேறு.

ஓதுமாதாபிதா குருதெய்வவிசுவாச
முடனிதி பூசைசெய்வோ

குற்றபாதாரசோ தரமாகுவோரிந்த
மொருவர்க்கு மெண்ணிலாதோர்
பூதயவுள்ளோர் சகாயமேபுரிகுவார்
பொய்யிலா வாய்மையுடையோர்
பூர்வமாந்தருமபரி பாலனம்பண்ணுவோர்
பூஞ்சோலை நந்தவனம்
பாதையிடமண்டபங் கூபந்தடாகநீர்ப்
பந்தர்முத லாய்ப்புரிகுவோர்
பண்பாமிவர்க்குமலை போல்வந்தவினையெலாம்
பனிபோல நீங்கிநலமாய்
மாதவமுகுந்தவன் பாதமேபெறுவர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௭

## மாதர் அவயவமயக்கு.

சிக்குபிகவோநாறுகின்றகுழன் முகிலென்பர்
திரைநெருக்கை மாறுகவாய்
செம்பவளமென்பாசனி கொண்டநீர்மாறுத
சிறுநாசி குமிழதென்பர்
பக்குமதன்றிவிழு கின்றமுலையானதோற்
பையைமக மேருவென்பர்
பாராதநரகத்துவாரமாங் குழிதனைப்
பகரின்ப வாரியென்பர்
மிக்குவருரத்தமுஞ் சீயுமென்பும்போர்த்த
மேனிமலர் மாலையென்பர்
மீளாதநரகந் தருஞ்சிறியவின்பமதை
மேலின்ப வீடென்பரிம்
மைக்கருங்கடலிலெனை வீழாமலாளுவாய்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௮

## நீதியின்பெருமை,

வித்தைதயவெசெய்திடுங் குருபீடமொன்னலரை
வென்றடக்கு கின்றதளவாய்
மித்திரர்கள்பகைவரா மேலவர்களேயார
விந்தைபுரி தாரைபதி
புத்திகலமேசொல்லு மதிமந்திரியாவரும்
புகழ்கின்ற வசியகுளிகை
புனகுழலைமாதருக் கதிருபவின்பம்
பொருந்தவரு காமதேனு
நித்தலும்பெருமையே செயுமரசதன்மொழிவு.
நிலைசெயத் தக்கக்ஷாத்ரம்
நேர்ந்தமிடி யென்கிற வாதங்கசேகரி
நினைத்தவெல் லாங்கொணர்ந்தே
வைத்திடுங்குலதெய்வ நீதியன்றிவேறுள
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. ௮௧

## உயர்ந்தபொருளிருக்குமிடத்து இழிந்த பொருளிருக்குமெனல்.

கோகனகமலர்மலர்ந் துறுகின்றவாவியிற்
கொட்டியு மலர்ந்திருக்குங்
கோகிலந்தொனிசெயுந் தேமாவனத்தனிற்
கூறுவாய்ப் பக்ஷியுறையும்
ஏகமெனவுலகம் புரிந்தமன்னவர்சபையி
லீனமன் னருமேவுமா
நிலகுமாணிக்கங்கள் விற்கின்றகடைவீதி
யிப்பாலை மணியும்விற்பார்
பாகனையமதுரரச லளிதப்ரபந்தகவி
பரமென்னவர்கள் சபையில்
பழங்காடிதனிலும் புனித்தயுன்கவிசொலும்
பாவலரு முண்டுகண்டாய்

மாகனகமுறையுமொரு மணியணியுமார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாயனே. ௯௰

## சேர்ந்தவினத்தின் குணம்பெறுவோர் பெருதோ ரிவரெனல்.

சோதிகொளரத்னமணி மாலையிடைநூலுந்
தங்குமணி யாய்விளங்குங்
கனைப்பறந்தன்னுடன் சேர்ந்தசெம்பொன்னுங்
அருப்புபோலவே மிகுக்கும்
வீதிபெருகுப்பையி லிருந்தாலுமாணிக்க
மெய்ப்பழுதின் காசொளிவிடும்
மிகவுஞ்செழுந்தேன் சொரிந்தேவளர்க்கினும்
வெள்ளுள்ளி நாற்றமாறா
காதலாய்ச்சேர்ந்தினி மினங்களைப்போலவே
பணியிலிருப்பவர் சிலபேர்
நார்சொல்லினுந்தங்கள் சுயம்குணம்விடாமலே
பகைமையாற்று வாழ்வர்சிலபேர்
மாதர்துகில்கொண்டொரு குருந்தேறுமாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாயனே. ௯௧

## வல்லோர்க்கும் பல்லோரால் தாழ்வு வருமெனல்,

பாரசர்வசாமகுடந்தகர்த்திடுசத்தி
பஞ்சமெத்தைக்கு நாணும்
பணிராசர்வணிமுடிகள் சிதறடியிடுதோகை
பச்சோந்தி யானடுங்கும்
கூராசமார்த்தாண்ட சந்திரகிரணங்களொ
கட்செவி னன்மறைபடுங்
கலைபுரிவிகடதட மத்தமாதங்கமொரு
கனல்சிறுநு கண்டுபயமாம்

சூராசசங்காப்ர வாகநீரூற்றுமொரு
துய்யசிலை யாண்மறிபடுந்
சொல்லின்றபெரியோர்க ளென்றுமப்பாரூற்
றோல்லிகொடு மூறிவர்கண்டார்
வராசதசரத மகாராசபுத்ரனே
மணவாள நாராயணன்
மணதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௨

## நல்லோர் புகழ்நிலை பேறு.

விசயன்மனுவுடனிட்சு வாகுகுசநாபன்
விருட்சிரகு காகுஸ்தனும்
மிகுமம்பரீஷன்மாந் தாதன்முசுகுந்தன்
விசாலனை திரணபிந்து
சசியிந்துவொடுதிலீ பன்னரிச்சந்திரன்
சர்வதா மன்பரதனே
சந்தனுநளன்சத்ய விரதன்பகீரதன்
சகரனொடு தானசன்னன்
தசரதன்மருத்துப் புரூரவன்சென்னியே
திரிசங்கு முடன்யயாதி
சத்யசேனன்வீர சேனன்குருபாணவிக்ர
சேனன்விதுரன்பாண்டவர்
வசுதேவனதியோர் புகழுன்றிநின்றநிலை
மணவாள நாராயணன்
மணதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௩

## தீயோர்பழிநிலை பேறு.

சூரனொடுபானுகோபன் திரிபுரத்தினோர்
தாரகனை மதுகைடவர்
துர்துமகிடாசுரன் சம்பரசலந்தரர்
தூஷணன் திரிசிரகரர்

வீராவணகும்ப கர்ணனிந்திரசித்து
பிருகனக னிரணியாட்சன்
வெய்யவாதாவிவில் வலனுடன்றுர்ப்பாகை
மேவுமசமுகி தாடகை
தாருலவிசிசுபால தந்தவக்கிரர்சார்
சந்தமெனு டடம்பேசகன்
சகுனிதுரியோதனன் கஞ்சன்முதலாயினோர்
தங்களபகீர்த்தியல்லால்
வாரிசூழ்புவியிலவர் கொடுமைநிலையின்றதோ
மணவாள நாராயணன்
மனதிலுறைபவர்மேவு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௪

## வானப்பிரஸ்தன் முதலானோரியல்பு

ஒருபொழுதுமலமே பிராமணற்கருமங்க
ளுணர்வுடன் செய்துமனையா
ளொடுகாமமின்றியும் பாதங்கள்போற்றிவரு
முறையவன்வானப் பிரஸ்தன்
கருமமுடனுவ தபக வற்கைதுதிசெய்து
காயமுதலாமூன்றுங்
கருதாமலொருபோது சுவைநீக்கிமேயுண்ட
கருணையோன் சன்னியாசி
இருவினையுமவைசெய்த துஞ்செயச்செய்வது
மின்பமுங் கனதுன்பமு
மெண்ணியசாதிமா பும்பலவுமுன்செய்கை
யென்றெண்ணி யடிகடொழுது
ஒருமலவினையவதூத மெய்ஞ்ஞானியென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறைபவர்மேவு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௫

## உத்தமர் முதலானோர்கள்.

வினயமுடனன்னமுஞ் சுகமுமேஷமுமென்ன
வித்தையுற தன்னையறிவார்
பிருகாமைமுகற்பகங் கன்னன்மலர்போன்மரபு
விதமாய் விளங்கவருவார்
பனைபிறெரிகொளிகோங்கமுக மென்னவே
பரிந்தவர்க் கன்புகூர்வார்
பனசமுஞ்சூதமும் பாடலமுமன்னவே
பண்பினுட னுதவிசெய்வார்
சினமருவினீமொழுத் தொடுமணலெழுத்துடன்
சிலையெழுத் தெனமாறுவார்
செப்புமிவாதமையாகி யக்கமாப்பார்க்கவே
சிக்கைதனி லாய்ந்துபுவியேல்
மனிதருத்தமர்கள்மத் திமரதர்மூவர்காண்
மணவாள நாராயணன்
மனைநிறைந்தலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. ௪௯

## தேசங்களின் பெயர்கள்.

அங்கமத்திரமாள வங்காளவங்கேசுக
யாரியம் பாரசீன
மாந்திரமாடகேம கன்னமிடங்கண
மலந்திமொடு சேகிதருகம்
கன்னைகிகழ்காஸ்மீர மச்சங்கிராடங்
கருசமே குசேசனங்
கலிங்கமொடு வங்காள கேபாளசிங்களன்
கனத்ததுளு வங்கோளம்
கொங்கணைப்பேடங்கிரி கர்த்தப்புளிந்தங்
குளிக்கங் கிராடமகயில்
கூர்ச்சரமபப்பாம்வி கற்பகாம்போஜந்
கோசலஞ் சிந்துசௌடம்

வங்கமும்பணிகின்ற கருடகிரிவாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௭

## தேசமுதல் அண்டமளவாக நிற்குநிலை.

ஒட்டமுறுசாதகஞ் சவ்வீரபாஞ்சால
மோங்குநிட தங்கடார
முகந்தாஞ் சோனகஞ் சீனகாந்தாரமோ
டுலாவுமலை யாளவங்கம்
இட்டமுறுத்ராவிடஞ் சோளபாண்டியமாதி
யெண்ணேழு தேசமாகி
யிலங்குகாதக்கண்ட மாதிநவகண்டங்க
ளைய்ந்தசம் புத்தீவுமே
அட்டதிசைபெற்றதி லேழுபூலோகமிரு
தாதிமே லேழுலோக
முதலமேயாதிகீ ழேழுலோகங்களிவை
யனையுமீ ரேழாண்டமாம்
முட்டிலாவண்டங்க ளுன்றிருவயிற்றிலுரு
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௮

## பதினெண்கணங்களிவையெனல்.

தேவருடனசுரர்கள் சித்தர்கடயித்தியர்
சிறந்திடும் புருடர்கருடர்
செய்யகந்தருவர்கின் னரிராக்கதபூதர்
திகழ்வே தாளர்முனிவோர்
மேவுகிஞ்சையருரக ரங்காரியக்கதே
மேலுமா காசவாசர்
மிகுபோகபூமியோர் முதலாயபதினெட்டு
விதமான கணநாதரும்

பூவையர்களுக்கண்டு துதிசெயுந்திருமலை
புகழ்ந்துகோ ணேரிமூழ்கிப்
போற்றிபுன் சந்நிதி வணங்கியே துதியாத
புனசனன முஞ்சனனமோ
மாவலியனித்தசெம் மணிமகுடபாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௧

## பரமபாகவத ராவாரிவரெனல்.

சுகனெடுவியாசன் பராசனெடுசௌனகன்
றும்புருநா ரதன்வசிட்டன்
துங்கவான்மீகிமா வலிருக்குமாங்கதன்
சுக்ரீவன் மாருதி
தருமிட்சுவாகுவிபீமனுடன் பிரகலா
தனன்குசே லன்விஜயனே
தருமனெடுமுசுகுந்த னக்குரூரன்முனி
ஜடாயுவுட னம்பரீஷன்
அகலிதிரிசடைமாது பாஞ்சாலிசபரிமு
னைமுத்திடக் கஜராஜனே
யாதிராமாநுஜன் திருவரங்கத்தமுத
னாழ்வார்கள் பன்னிருவரும்
மகிமைபெறுமுன்றொண்டர்பாதமேதுணைகொள்ளு
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

## அடியார்க்கு வருஞ்சிறப்பு

உனதுபாதம்போற்று மடியார்கள்சிந்தையி
லுவந்துநீ யென்றுமுதவா
லுன்னுடையதிருமாக ரென்மருஞ்சேர்வரை
குற்றநா ளிதிகள்சேரும்
கனிதிகள்சேர்ந்திடத் தனதன்வருவானுடன்
கருணைபுரி நேயன்வருவான்

# திருவேங்கடசதகம்.

காதலனைத்ததா ளுமைமவருவளன்னையாய்
கந்தன்வரு வன்மருகனல்
தனதுமாமன்வருவ னாசன்வராலாலமார்
சகலருங் கண்டுவருவார்
தருமஞ்செழிக்குமருள் சேருமதவன்றியே
தவமொன்று செயல்வேண்டுமே
வனசரோருகமலர் மடந்தைவளர்களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. ௱௧

## அவையடக்கமும் பிரார்த்தனையும்

ஒருமலையெடுத்துமலைத சாந்தவாமனதேவ
ருபயபத சேவைதனையே
புளங்கொண்டுவெண்மணியில் வாழுமுத்தாரையு
ணுவுநா ரணபாரதி
பொருமலைபெருங்கங்கை யுங்காளியாறும்
பொருந்துகடல்போற் புலவர்கள்
புகழ்சபையிலெனதுவேங் கடசதகநிதிசெறு
புகலவரு நூறுகளியும்
பகினுடனேவருங் கேட்டியன்றமிழின்மேற்
பக்ஷமைத் தாளவருவாய்
பாலகன்புன்சொலைக் கேட்டுமேமகிழுமவன்
பார்மீதி லன்னையலவோ
வருபவர்களிக்ககல் வாழுதவுநேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. ௱௨

## திருவேங்கடசதகம்.

முற்றிற்று.

கடவுள் துணை.

மலையாள மாந்திரீக அரிச்சுவடி.

# விளம்பரம்

இதனால் சகல மானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்; இதுகாலபரியந்தம், அகப்படாமல் யிருந்த மலையாள மாந்திரீகத்தை அநேகர் வேண்டுகோளின் பேரில மலையாள சுவாமி மாணுக்கரிலொருவராகிய ம-அ-அ-ஸ்ரீ. வேலாயுத சுவாமிகளால், எழுதி முடிவு பெற்ற யெந்திரங்களும் அதற்குரிய பீஜாக்ஷரமூல மந்திரங்களும் புதிதாய் அச்சிட்டு யிருக்கிறது இன்னும் மற்றும் புஸ்தகங்களு மிருக்கிறது வேண்டியவர்கள் நேரிடமாவது வி. பி. மூலியமாவது பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| மலையாள மாந்திரீக அரிச்சுவடி. | 0—4—0 |
| சந்தமணைதேவி நாடகம | 0—4—0 |
| ஞானக்கோர்வை-2-பாகம் சேர்ந்தது | 1—0—0 |
| நாலாயிர திவ்ய ப்ரபந்தம | 2—0—0 |
| தெரு வடகலை | 2—0—0 |
| ஜாதகசித்தியென்னும் அனுபோக ஜோதிட ப்ரமபரகசியம | 0—12—0 |

இப்படிக்கு.

ம-மாதவ கிருஷ்ண முதலியார்.

நெ-11-தாண்டவராயபிள்ளைத் தெரு.

சௌகார்பேட் போஸ்ட்.

சென்னை.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்,

மணவாளநாராயண சதகமென்னும்

# திருவேங்கடசதகம்

காப்பு,

செந்திருவாழ் மார்பன் றிருவேங்கட சதகம்
பைந்தமிழா னீதிநெறி பாடவே—வந்தருளும்
கார்முகமஞ் சங்கத்தான் கைத்தாமரையணிந்த
கார்முகமஞ் சங்கத்தான் காப்பு,

—(※)—

தனியன்

ஓங்குதண் டலைசூழ மேகமனை தேன்சொரியு
மோமலூர் வேங்கைபூப
னுதவுமண வாளநா ராயணன் களமூரி
னுலகநீ திக்கேட்சமுன்
தேங்குநீர் வயல்சூழும் வெண்மணியில் வாழுமுயர்
செல்வன் மூததாதையனார்
செழுந்தவ முதித்தநா ராயணபாரதித்
திருவேங்க டச்சதகமே
பாங்குபெறு முலகுளோர்க் கிருகண்மணி யாகவிருட்
பானுவிரு வழிவிழியதாம
பவக்கடல் கடக்கவரு வங்கமாம் பொங்குமொளி
பாவுமெய்ஞ் ஞானவழியாம்
சங்கிக பாத்துணைய தாமிதை படிப்பவர்க
ளியல்வேங்க டேசரன்ற
னிசையருளை யுற்றுநல மேபெருகி வாழுயவ
ரெழுபொன்மலை போல்வாழ்வரே.

—(※)—

# திருவேங்கட சதகம்.

## நூல்.

### கடவுள்வாழ்த்து.

பூமேவு திசைமுகனை யுந்திதனி லீன்றதும்
புநிதவே தாகமமெல்லாம்
புருஷோத்த மன்றெய்வ மென்பதும் பூசுரர்கள்
புரியுபக் கிரசருமமுந்
தேமேவு மலர்மங்கை மார்பில்வளர் சீருஞ்
செகந்தனை காத்தருள்வதும்
தேவர்முதன் மிர்கசெந்து பட்சிசிலை மரமுஞ்
செழிக்கப் பதந்தருவதும்
பாமேவு பொருளலங்காரஞ் சிறப்பதும
பலவிதமு நீயென்றதாற்
பரதெய்வமுண்டென் றிருப்பார்களெந்நூல
படித்தவித மோதெரிகிலேன்
மாமேவு பைந்துளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (க)

### அந்தணர்சிறப்பு.

சிலமிரு மாகம புராணமனு நீதியுந்
தேர்ந்துமெய்ஞ் ஞானநிறைவார்
செய்கின்ற யாகாதி மந்த்ர கருமங்களாற்
றேவர்க்குமுதவி செய்வார்
காலமுத லாகிய ப்ரமாணங்கையிற்
கனிபோல வேகாட்டுவார்
காயத்ரி யகிமையாற் சகலதீ வினைகளுங்
கனலிட்ட பஞ்சுசெய்வார்
ஞாலமிசை திங்கண்மும் மாரியங் கொற்றவர்
நடாத்துசெங்கோல் வளமையு
நாடுகள் செழிப்பதுஞ் சகலதருமமும்வேத
நாயகர்மகத்துவங்காண்

வாலகரு டன்பண்டு கண்டகதை யல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே. (௨)

அரசர் சிறப்பு.

சீருலவு மனுநீதி மந்திரிசொ றன்புத்தி
தேசத்தியற்கைநான்குந்
தேர்ந்துசெவி விழிமனது மூன்றினும் பொறுமை
சேர்ந்துசெங் கோல்செலுத்திக்
காருலவு கமலமுங் குமுதமுங் காலங்கள்
சார்ந்துமலர் கின்றவிதமுந்
தந்தியொடு முதலையொரு தானபல முங்கண்டு
தரியலரை வெற்றிகொண்டு
பாருலவு கெடிசேனை தனதானி யஞ்சகல
பாக்கியமு மிகவிளங்கப்
பற்பலதன் மங்களோடு கீர்த்திப்ரதாபம்
படைத்ததிற லோனரசனும்
வாருலவு தனமங்கை மனமகிழ நாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௩)

வணிகர் சிறப்பு,

இடமுடன் றன்பன தறிந்துவா ணிபமதே
செய்வரா தாயமிஞ்சிச்
செலவுசெய் யார்யாவர் வருகினுங் கண்டபடி
தேர்ந்துநிறை போலுரைப்பார்
அடகுதக் தானுமரி யாதையில் லாருக்
கரைக்காசு கடனுமுதவா
ரனமனு நீதியுடையோர்களுரை வாய்மையா
லளவிலாதே பொருள்கொடுப்பார்

கடுகுதனி லெட்டிலொரு கூறுவா வெனிலுங்
 கணக்குமுறை தன்னில்வழுவார்
 காரிய விசேஷமதி லொருகோடி யுதவுவார்
 கருணைவர்த் தகர்பெருமைகாண்
வடமலை தினம்பரவு தென்மலைக் கதிபனே
 மணவாளநாராயணன்
 மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
 வரதவேங் கடராயனே. (௪)

## வேளாளர்சிறப்பு.

அந்தணர்கள் தருமமுஞ் சகராசர் புயபலமு
 மவனிவர்த் தகலாபமு
 மனைவாக்கு மென்மையுந் தருமமுந் தானமு
 மன்புமங் கையரின்பமும்
புத்திதெளி நியமமுஞ் சாத்திரமு மாகம
 புராணமொடு சகலகலையும்
 பொய்யாத வுண்மையுங் கீர்த்திப்ர தாபமும்
 புகழ்கின்ற தேவர்கிலாம்
விந்தைபுரி மானமுங் குலமரபு நீதியும்
 விதாண முதற்சகலமும்
 வேளாளர் குவளைபுனை காராளர் தங்களுடை
 மேழியின் பெருமையன்றோ
மந்தர மெனுமபுய சவுந்தர முகுந்தனே
 மணவாள நாராயணன்
 மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
 வரதவேங் கடராயனே. (௫)

## புருஷராய்ப்பிறந்தோர் பெறுபயன்.

புருஷராய்ச் சநநமெடுத்தபேர் மெய்ஞ்ஞான
 போதத்தை யறிவதொன்று
 பூமியொடு மிக்கதன வானவ தொன்றலது
 பூவைஞ் செய்வதொன்று

தருமவானென்று மிகு கீர்த்திமானென்றுநற்
சற்குண விவேகியென்று
சகலருமபுகழ்கின்ற வித்துவானென்றுரணை
சங்க்ராம வீரனென்று
சருணைசேர்ந்தவகை யில்லாத மனிதரைக்
காசினியிலேன்படைத்தாய்
கருதாதாயுதமும் பார்க்கின்ற பேர்களிரு
கண்களுஞ் செய்தவினையோ
மருவுலாவியதுளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௧௬)

நகரச்சிறப்பு.

பாகதகீதப்ரபல வேசியர்களாடலும்
பாடலும் பெருகோயிலும்
பலவாவி மண்டபங் கோட்டையரணங்களொடு
பலர்மேவு கடைவீதியும்
இரதகச துரகம்ப தாதிசதுரங்கபல
மேற்கின்ற தளகர்த்தனு
மெண்ணமிகு மந்திரிப்ர தானிதானுபதிய
ரியலுத்தி யோகசயனமும
விரதமறை யோராதி நாற்குலமுமொன்றென்று
மிக்கசோடசதானமு
மேலாய்ச் சமீபித்த நதியுமாய் மநுநீதி
வேந்தனும் பெருபட்டணம்
வாதருமை சிங்க பட்டண மெனச்சொல்வர்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௧௭)

அரசர்க்குரிய தொழிலாளரியல்பு.

காரியா காரியங் கொற்றவர் தெரிந்திடக்
கண்டுசொல் வோன்மந்திரி
காலமுந் தன்பலமு மெண்ணியிகல் வென்றிடக்
கருதுவோன் றளகர்த்தனும்
சீரிய தலங்களொடு ராச்சியஞ் சகலமுந்
திட்டமிடுவோன் ப்ரதானி
செய்ய வாசகதாட்டி யவதான வக்கணை
சிறக்குமவ னோராயசன்
சூரியன் றிசைமாறி னுந்தான் றொடுத்தவத்
தொகைவிடான் கருணீகனுஞ்
சொல்வன்மை சபைவன்மை பாராசர் வன்மை
சுமுகனே தானுபதி [தெரி
மாரியது காதகருணு மணிமேக வண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (அ)

இதனு லிஃதுளதாமெனல்.

அதிகார மதுவந்து சேரிலெவ ருக்குமே
யதிகவல் லமைசளுண்டா
மாடை யாபரணங்கள் சேரிலெவ ருக்குமே
யழகுபெறு வளமையுண்டாம்
நிதிமேவு செல்வமது சேரிலெவ ருக்குமே
நிறைகின்ற மேன்மையுண்டாம்
நெஞ்சமகிழ் விதரணஞ் சேரிலெவ ருக்குமே
நிலைபெற்ற கீர்த்தியுண்டாம்
துதிமேவு பத்தியது சேரிலெவ ருக்குமே
தோன்றவரு தெய்வமுண்டாஞ்
சுகமிக்க பருவமது சேரிலெவ ருக்குமே
துய்யமண வாசையுண்டாம்

மந்திரோ ரிலைக்குமுத மலரா இருக்குமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே. (௯)

அரசரிடத்துப் பெறத்தகும் வரிசைகள்,

சுற்றமொடு தானுநம் பினபேரு மின்பமாய்ச்
சுகமுறிற் புரவியமையுந்
துய்யதரு மங்களொடு கீர்த்திப்ர தாபந்
துலங்கிலுற் சிவிகையமையும்
கொற்றவர்கள் மெச்சவே பரராசர் கெடிவெற்றி
கொண்டுவரி லானையமையுங்
குறையொன் றிலாமனிறை புகழ்பெற்றவீரர்முன்
கூறுங்கை வாளமையும்
உற்றதகை யிவையெலாம வேந்தர்சன் மானமுட
னுதவாம லேயெற்றிடி
லுறைகொண்ட நாடகந்தன்னில்வரு கோலமுட
னூர்வலஞ் செய்கோலமும்
மற்றவர்கள் சரியென்று சொலவர்காண்
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௰)

பிதுர்வாக்கிய பரிபாலனமுதலியவற்றால் வருநன்மை,

தந்தைதாய் வாக்ய பரிபாலனம் புரிவதுந்
தான்சொன்ன படிசெய்வதுந்
தவறாத விரதமும் பொய்யாத வசனமுந்
தானமுங் கனபொறுமையும்
சிந்தையகிழ் மரபினோர் செய்தொழின் முடிப்பதுப
தேவதா விசுவாசமுஞ்
செய்தபேர் பரசராமன் கவச குண்டலன்
செயராம னெறிவீட்டியன்

அந்தமிகு சொல்லரிச் சந்திரன் மாபலி
யடறநும னெடுபகீரத
னருள்பிரக லாதனிவர் போற்பெருங்கீர்த்தியொடு
மவனிமிசை நீடுவாழ்வார்
வந்தமலர் போற்றவளர் சேஷகிரிவாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௰க)

சூதுமுதலியவற்றால் வருந்தீமை,

சூதுபெறு வித்தையும் பரதாரமோகமுஞ்
சோதரன் றனையிகழ்வதுந்
துலங்காத புத்தியு மடங்காத வார்த்தையுஞ்
சொல்லிச்செ யாததிறமும்
தீதுபெறு வஞ்சமும் மதங்களும் பிறருடைய
திரவியத் தனிலாசையுஞ்
சிந்தையக மெனுமகங் காரமும் பெற்றபேர்
சீர்நளன் கீசகன்றான்
மீதுபொரு வாலிசக ரன்குமரன் சிசுபாலன்
வென்றியுத் தான்வில்லவன்
விந்தைபெரு துரியோத னஞ்சனகன் முன்பெற்ற
விதமுற் றிருப்பர்கண்டாய்
வாதுபெறு தரவரை மோதுமொரு திகிரியாய்
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௰௨)

சாதிமுதலானவைகளின் குணமே சிறந்ததெனல்.

தடவரை யதன்மீது விளையினுஞ் சோளமது
சன்னசம் பாவாகுமோ
சந்ததமும்வாடா திருந்தாலு மெட்டிமலர்
சாதிமல் லிகையாகுமோ

கடலெலா நிறைவெள்ள மாயினுஞ் சுவைபெற்ற
காவிரியினா ற்றாகுமோ
காகங்கள் கோடிதொனி செய்தாலு மொருசிறு
கருங்குயிற் றொனியாகுமோ
படர்கின்ற பேய்ச்சுரை சொரிந்தபழ மூந்திரிப்
பழமதற் கிணையாகுமோ
பகர்கின்ற சாதி ,ங் கனவயது மேன்மையும
பலகூட்டமுந் தேகமார்
வடிவதிக மன்றுகுண மேயதிக மென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (கரு)

செல்வத்தால வருமுயர்வு.

செல்வமது சேரிலோ வெங்குபேர் வேங்கனுந்
திரளாகில் வேங்கடனுமாஞ்
செயல்கொண்ட வேங்கடா சலனுமா மையராந்
திம்மைய ரவர்களாகும
நல்வரிசை கொடுதான டத்திடுங் காரிய
நயந்ததூ தாகுமப்பா
னல்லோலை கிள்ளாக்கொ டாபபமேலொருவசன
நனிலுமுன் கப்பமிடுவார்
சொல்வண்மை வாவென்ற பேர்வாரு மென்பார்
சுவாமியாந் தேவரீராந்
துதிபெற்ற தேவரீ ரவர்களாங் காணுமுன்
றொழுதெழுந் தருளு மென்பார்
வல்விதம் பெறுபாம லோபியர்கண் டிண்டனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (கசு)

வறுமையால் வருமிழிவு,

அதிக்கின்ற மனைவியையுங் குறைசொல்வடங்கைதாய்
சோகமுற வசைகூறுவார்
துன்பமொடு மனமெலியும் மேனிவெற் றுருவமாந்
தொலையாத கவலைவளரும்
உதிக்கின்ற புத்தியு மழுங்கிடுங் கல்வியோ
முதாரத்தி லிகபசியா
முறவின்முறை யாருமொரு வார்த்தைசொல்லார்
அத்தரமு மொருவர்கேளார் [சொன்ன
விதிக்கின்ற வுலகத்தி லெல்லாரு மிகழுவார்
மிடிவந்து சேர்ந்தென்றால்
மேன்மையே தறிவேது குலமேது நலமேது
வித்தையே தேவரீவாகாண்
மதிக்கின்ற வுன்பதம போற்றிவை சேருமோ
மணவாள நாராயணன
மனதிலுறை மலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௧௫)

உடனே கண்டிக்கப்படுபவர்கள்,

முடிகொண்ட கொலையாளர் களவினோர் சாதிநெறி
முறைமை வழுகின்றதீயோர்
மூர்க்கமுறு பகையாளர் வெகுசனவிரோதியர்காண்
மொழிமாறு சோனுரைப்போர்
மிடிகொண்ட பேரைக் கெடுத்துளோர் கற்புடைப்
மெல்லியரை மேவுமபலோர்
விசுவாச காதமிது செய்குவோர் துஷ்டமா
மிருகங்கள் மிக்கபிணிகள்
கடிகொண்ட விஷமுடன் செய்பகை யென்னவே
கருதுபதின் மூன்றுவகையுங்
கண்டவுட னேயின்னெ யென்றேது கண்டித்தல்
கருணைமனு நீதி கண்டாய்

வடிகொண்ட தெள்ளமுத மனையகுண சீலனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (கசு)

பொறுத்துக் கண்டிக்கப்படுபவர்கள்.

கண்டதிரு பந்தனைத் தள்ளுவோர் குருசுவாமி
காரியக் குறைசெய்குவோர்
காணு விடத்திற் பழித்துளோர் வஞ்சகங்
கருதுவோர் பொய்யுரைப்போர்
சண்டைகொடு தந்தைதாய் சுற்றமுட னுறவினைக்
தவிராத கலகமிடுவோர்
தம்முடைய வலுமையா லெளியோர் வழக்கினைத்
தள்ளிய மதங்களுடையோர்
அண்டிவரு துஷ்டரொடு கூடிவினை செய்குவோ
ராகுமிவ ரெண்மர்தமையு
மாறுபோன் மூன்றுபிழை கண்டபின் கண்டிப்ப
தாசர்மனு நீதிகண்டாய்
வண்டுலவு கின்றமலர் துளபமார் பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (க

என்றுமே கண்டிக்கப் படாதவர்கள்.

தூதாகி வந்தபேர் பிக்கதா ரதிபதியர்
துதிபெற்ற தந்தைதாயார்
சொல்லுமா சாரியர் புரோகிதர் புராணிகர்
சுகந்தந்த போகமடைவார்
வேதாக மகற்ற வைதிகர் தபோதனர்கள்
விகடப்ர சங்கமிடுவோர்
வித்தையா லுயர்கின்ற கவிராஜர் சுத்தரான்
வீரர்மர பினிலுயர்ந்தோர்

சீதான வெம்பிணி யடைந்துளோர் வறுமையோர்
சிறுவரொடு தனையபிமனோர்
செய்யுமிவர் பதினெண்மர் மதியாத குற்றங்கள்
செயினும் பொறுப்பதல்லால
வாதாடி யெதிர்செய்கை மன்னர்நெறி யன்றுகாண
மணவாள நாராயணா
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (க௮)

இவர் இதனால் வெல்லுவரெனல்.

வேந்தருட னேவேந்தர் வாதுவரி லேகொடிகொள
வெற்றிகொண் டேசெயிப்பார்
வீரருட னேவீரர் வாதுவரி லாயுத
வித்தைத்திறலே செயிப்பார்
போந்திடு நியோகியர்கள் வார்த்தை யுசிதத்தாற்
பொருந்தவே வாதுவெல்வார்
புலவர்க்கு வாதுவரின் மாபெலாம் வசைசொலிப்
பொருள்விளக் காறசெயிப்பார்
சாதமணி வேசியர்கள் வாதுவந் தாற்பாத
சங்கீத மொடுசெயிப்பார்
சரசகவி ராசர்பிர சங்கத்தினால் வாது
தன்னைச் செயிப்பர்கண்டாய்
சாந்தகிரிதர நிகர்மேனி ராதையது மோகனே
மணவாள நாராயணா
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (க௯)

இக்குற்றத்தாலிது பயன்படாதெனல்.

செயல்கொண்ட மானமது பங்கமா னுற்றிரு
செழித்தென்ன மாறிலென்ன
செய்யகுண மின்பரச மில்லாத மங்கையைச்
சேர்ந்தென்ன நீங்கிலென்ன

இயல்கொண்ட கீர்த்திமரி யாதையில் லார்களை
யிகழ்ந்தென்ன புகழ்ந்துமென்ன
விடநுற்ற போதுதவி செய்யாத பேர்நட்
பிருந்தென்ன போயுமென்ன
கயலகொண்ட விழியினுள பேரிளம் பெண்கொங்கை
காட்டிலென் மூடிலென்ன
கருணைகொண் டொருவருக் குறையாத பேர்வித்
கற்றென்ன மறக்கிலென்ன [தை
வயல்கொண்ட பயிர்மேனி புயல்கொண்ட களமூரின்
மணவாளநாராயணன்
மணதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடநாயனே. (உ௰)

இவையெல்லாமளவுபடினு மாசையளவுபடாதெனல

பொங்குநதி மணலுமா காயத்தி னெல்லையும
பொழியுமழை யின்றிவலையும்
புடவியிசை வருசனமு மடவியிசை வளர்மரமும்
பொருப்பின்மிசை யுற்றசிலையும்
திங்களுட னுற்றதா ரகைகணமு முன்பாத
சேவைசெய் வோர்பெருமையுந்
தெரிவையர்கண் வனமுமுனை கினையாத பலமூடர்
சென்மமுங் கடலாழமும்
அங்கசன் கருணைபுரி மோகமுங் கவிராஜ
ரருள்பெற்ற புத்திநலமு
மளவுகண் டாலுமோ மனிதருறு மாசைதனை
யளவிடக்கூடாதுகாண
மங்கைமிதி லாபுரி மடந்தைமகிழ் நேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங கடநாயனே, (உக)

### இன்னார்க்கு இதுவில்லையெனல்.

காதன்மிகு காமுகர் தமக்குமுறை யில்லைவஞ்
சகர்க்கு மரியாதையில்லை
கட்டுண்ட கள்வருக் குறவின்முறை யாரில்லை
கசடர்க்கு ஞானமில்லை
வேதமறி பூசுரர் தமக்கருள்செ யாரில்லை
விரோதிக்கு நேயரில்லை
மெய்ஞ்ஞானி யர்க்குவரு சாதிகுல மொன்றில்லை
வீரர்க்கு மனபயமில்லை
போதமிகு யோகிக்கு வினைசெய்கு வாரில்லை
பொய்யர்முன் சாட்சியில்லை
புலவர்க்கு நேயமில் லாரில்லை செல்வனைப்
போற்றிலா வொருவரில்லை
மாதரெழில் கண்டுமன மகிழாதபேரில்லை
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௨௨)

### இது இவ்வாறாயின் இதுவாமெனல்.

எழுதினது சொல்லவே ராயரொப் பந்தனக்
கிசையுமவனே ரபையா
மிடர்வேளை யுதவுமவ னேகண்ணன் வழிநடைக்
கேற்றதே யுற்றவசுவம்
பழகிமன மறியுமவ னேயூகி யந்திரநற்
பயனீக்கி னென்றந்தையாம்
பசிபிற கிடைத்ததே யமுதமாந் துயிலினேர்ப்
பட்டதே புஷ்பசயனம்
கிழறந்து காத்ததே கற்பகந்தாசத்தி
னீர்தந்த தேசங்கையாம்
கிறைபிணி தவிர்த்ததே சஞ்சீவி தன்மட்டு
நீச்சுநீ ரேகடலதாம்

மழைமுகி லெழுந்தனைய மெய்யனே துய்யனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௨௩)

இவர்க்கு இது தெய்வமெனல்.

தீதுபுரி லோபியர் தமக்குப் பணங்களே
தெய்வமாங் காமுகர்க்குத்
தெரிவையர்க டெய்வமாந் துஷ்டருக்கென்னிலோ
தீமையே தெய்வமாகும்
நீதியுடை யோர்க்குப் பயந்தீர்த்து ரக்ஷித்த
நேயரே தெய்வமாகு
நீங்காத் தரித்திரர் தமக்குங் கொடுத்தபேர்
நித்தமுந் துதிதெய்வமாம்
சாதியனை வர்க்குமறை யோர்தெய்வ மம்புவி
தனக்கரசனே தெய்வமாஞ்
சகலர்க்கு மாசாரியென் றெய்வ நாரியர்
தமக்குநா தன் றெய்வமாம்
மாதவம் புரிஞானி யர்க்குநீ தெய்வமா
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௨௪)

இது உண்டாயினும இது வில்லாவிடிற்
பயனில்லையெனல்.

எத்தனைபொருட்களை யிருக்கினும பத்திரச
மில்லாத கவிகளென்ன
வெண்கோடி சம்பளந் தருகினுஞ் சன்மான
மில்லாத சேவகமென்ன
சித்ராதி லீலைபல செய்யினு மிதமுண்டு
சேராத சுகமதென்ன
செம்பொன்மிகு செல்வமுண்டா யினும் பயிர்கொ
செயலிலா வளமையென்ன [ண்ட

வித்தையுளவெல்லாம படிக்கினுங் குணவினய
மேவாத பெருமையென்ன
மெய்த்துளசி யில்லாத நந்தவனமென்னவே
விளங்குமென்பார்கள்கண்டாய்
மத்தகச ராசன்மகிழ் விசய நரசிங்கமே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (உரு)

இதுஇச்சிறப்பட்டையினும் பயனில்லையெனல்.

காட்டிலின் டஞ்செடி தழைததென்ன காஞ்சிரங்
கனியது சிவக்கிலென்ன
கரைநாண லெல்லா மலர்ந்தென்ன காகங்
கழுத்திடை வெளுக்கிலென்ன
ஆட்டின்கழுத்திலதர் நீணடென்ன நீர்ப்பாசி
யதுபச்சை யாகிலென்ன
வற்பருக் கதிகாரம் வந்தென்ன பேடிகையி
லாயுத மிருந்துமென்ன
நீட்டமொடு கரடிக்கு மயிர்வளர்ந்தாலென்ன
நீதியறி யாதமூட
நிறைசொல்வராயென்னஞானமில்லாக் கல்வி
நெறிபோலிருக்குமென்பார்
வாட்டடங் கண்ணரிபுனைகண்ணிமகிழ் கண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (உசு)

கலியுகதோஷம்.

அப்புவியின மிக்கமெய்ஞ் ஞானியைக் கண்டாலு
மதுவுமொரு வேஷமென்பா
ராகம புராணமறு நூல்விருமபார்கள்பரி
யாசகதையே மெச்சுவார்

கம்பமிசை யொருகோடி கரணமிட் டாலுமது
கண்கட்டு வித்தையென்பார்
கற்பனையலங்கார மாக்கவிகள் பாடினுங்
கற்றவர்க் கெளியவென்பார்
நம்பிவிசு வாசமொடு துதிசெய்யி னுங்கள்ள
ஞானமென் பார்களவைபோ
னயந்த கலியுக மகிமை நின்னையுஞ் சிலபேர்
நவின்றுகுறை சொலவர்கண்டாய்
வம்பவிழ் மலர்ச்சோலை மலையலங் காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்கட ராயனே. (௨௭)

அரசரது நன்றியறியாமை.

அரசரைக் கண்டுபின் காரியக் காரருக்
கதிகபரி தானமுதவி
யதிகார மொன்றினைப் பார்ப்பவ ரிடத்திலு
மதுக்கொட்டிரட்டியீந்தும்
கருதுகிலு வைப்பணந் தவணைப் பணங்கண்முன்
கடன்வாங்கி யேகொடுத்துங்
கணக்கர்செல வெழுதார்க ளூட்டார்க ளேவர்
கடன்காரர் தாமறிப்பார்
விருதுசீட் டுக்காரர் வைவார்கள் கொல்லரோ
வெயிலிடை நிறுத்தி வைப்பார்
விதமாகு மவரவர்க ளெல்லாஞ் சபாசென்ன
மெய்ப்பாய் நடந்துகொளினும்
வரிசைபெறு துரைகளவ ருமைசற் றறிவரோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௨அ

கவிவாணரருமை யறிவில்லாமை.

கற்பனை யலங்கார மாக்கோவை பாடினாற்
கனவரிசை யொருமச்சடங்
கலம்பகங் கூறிலொரு துப்பட்டி பிள்ளைக்
கவிக்கென்னி லொருசோமனும்
நற்பொரு ளுலாவென்னி லுறுமாலை மடலுக்கு
நாணயம தாயொருபணம்
நலவண்ண மென்னிலொரு சாப்பாடு மாலையெனி
னன்மை தரு தாம்பூலமாம்
அற்புதம் பெறுகவிக ளென்னிற் பளாபளா
வதிவெகு மானமாது
மப்படியு மாயிரத் தொருவரொன் றுலெங்க
ளருமை யவரறிவர்கண்டாய்
மற்பொருத மல்லரொடு முற்பொருத வீரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௨௬)

இதனையிவரன்றி யிவரறியாரெனல்.

கீர்த்தனைக ளின்மகிமை பாகவத ரலலாற்
கிரிக்குறவர் தாமறிவரோ
கீர்த்திப்ர தாபமுறு விதரணிக ரல்லாது
கேட்டலோ பியறிவரோ
சேர்த்தமநுவிக்யான நீதிமன் னவரலாற்
சிலைவேடர் தாமறிவரோ
செய்ய பகவற்கீதை மெய்ஞ்ஞானி யல்லாது
சென்மநீசர்களறிவரோ
கோத்தமணி மாலையை மங்கையர்க ளல்லாற்
குரங்குகண் டறியுமோ
கொக்கோக மகிமைதனை நாகரிக ரல்லாது
கூறுபேடி களறிவரோ

வார்த்தைபுசி த்தைமந் தரிசனன்றி யறிவரோ
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௯௰)

பயனில்சொல்லி னிழிவு.

அகமென்று தன்னைப் புகழ்ந்தபேயுந்தந்தை
யன்னையர் வருத்தமுறவே
யயலார் தமக்குதவு பேயுமட வார்புத்தி
யனுதினங்கேட்டபேயும்
சுகமென்று பொதுமாதரைக்கூடி மனைவியைத்
துயரமே செய்தபேயுந்
துணைந்துரைகளமற்று முறிகின்றபேயுமுன்
சொன்னதில்லை யென்றபேயும்
செகமன்னராமென்ற தலையென்றபேயுமியல்
செய்நன்றி கொன்றபேயுந்
திரளான சபையினிற் பயனிலா வார்த்தையுரை
செய்கின்ற பேய்க்குநிகரோ
பகமென்று கோசிகனழைக்கமகிழ்ந்தாயனே
மணவாளநாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௯௰௧)

எல்லைக்கடத்தலின் வருமிழிவு,

அரசர்மேலாணைதனை யெண்ணாத குடிகளு
மாதாயமிஞ்சுசெலவு
மன்புடைய பேர்புத்தி கேளாத கோபமு
மளவுக்கடங்காத நாவும
சரசவகைமிஞ்சவே வந்தமரி காசமுந்
தனைமிஞ்சு தொழிலாளருந்
தமிரியந் தனைமிஞ்சு கவலையுஞ் சாக்ஷியோர்
தமைமிஞ்சு முறைமைழக்கும்

வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.


கரசரண வவயவந் தனைமிஞ்சு தேகமுங்
கவியின்மிஞ் சியவெழுத்துங்
கருதவுறை கேளாத மனையாட்டி புணர்நாய
கன்புகழையொக்குமென்பார்
வரசரச கவிராஜர் புகழ்வேத குலதிலக
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௧௨)

இவர்க்கு அமுதம் இவ்விடத்தெனல்,

அண்டருக் கமுதமது சொர்க்கத்தில் வேதியர்க்
கமுதமது சொல்லுமறையிலே
யானைகவி ராஜருக் கமுதமணி நாவிலே
யாவினுக்கமுதமுலையில்
பண்டிதர்க் கமுது கையிலே விதரணிகர்
பங்கிலமு தங்கண்ணிலே
பாகவத ருங்கமுது காதிலே பரிவுடைய
பாங்கருக் கமுதமனதில்
ஒண்டொடிய ருக்கமுத மாமதிய மெனவே
யுகந்திடுந் தேகமெல்லா
முற்றபெரி யோர்தமக் கமுதக் குணத்திலே
புணர்வுடைய பேர்க்கமுதமோ
மண்டலமளந்தவுன் பாதத்தி லென்பர்காண்
மணவா ளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்கடராயனே, (௧௧

இவர்க்கு விஷம் இவ்விடத்தெனல்.

திருடர்க்கு விடமெலாங் கையிலே காமிக்கு
தெரிவைக்கு விடமுலையிலே
தீயபொய் யர்க்குவிட நாவிலே மதமுடன்
திரிவோர்க்கு விடநிதியிலே

கருதரிய கோளர்க்கு விடமுதடு
காமுகர் விடக்கண்ணிலே
கட்செவி விடங்கள்பல லடியிலே தேட்கெனிற்
கனவிடங் கடைவாலிலே
அரியதுஷ் டாக்கென்னி லெட்டிமர மெண்ணவே
யங்கமெல் லாம்விடமதா
மடுத்துக் கெடுத்திடும் பகைவர்வுட மனதிலே
யப்பொன்விலை மாதருக்கு
மருவுவிட மல்குலிற் றெரியவச மன்றுகாண்
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே, (௯௪)

இவர்கருப்புண்ணியமிதுவெனல்.

உன்னுடைய பதசேவைக ண்டுபணி கின்றதே
யுடல்செய்த புண்ணியமதா
முறைகொண்ட கீதையின் சாரஙகள் கேட்பதே
யுற்றசெவி யின்புண்ணியம்
தன்னுடைய புத்திர ரளாங்தசோ றுண்பதே
சாற்றுநாவின் புண்ணியங்
தகதுவ முணர்ந்தபெரி யோர்தமைக் காண்பதே
சார்ந்தவிழி யின்புண்ணியம்
பன்னுமிர மலர்கேட்கு முன்னங் கொடுப்பதே
பாணியது செய்புண்ணியம்
பதிவிரத மங்கைகுண மிக்க புருடனும்
பலிப்பதே வெகுபுண்ணியம்
மன்னுமிவை முன்செய்த புண்ணியம தென்பாகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே, (௯௫)

இவர்க்குப் பாவமிதுவெனல்,

திருந்துகற் பனையிலாப் புன்கவிகள்கேட்பதே
செவிசெய்த பாவமாகுஞ்
செயலருமை யறியாத பேர்கண்முன் சேவகந்
திரிதல்கால்செய்தபாவம்
பரிந்தவுபசாரமா தரவிலார் மனையுணவு
பருகனா வின்பாவமாம்
பாவனை லயஞ்சுருதி நயமிலாப் பரதமது
பார்த்தல்விழி செய்தபாவம்
தருந்தமிழை யறியாத பேர்களிட மேற்கின்ற
தகைமை கைசெய்தபாவந்
தன்பெயர் விளங்காத பிள்ளையைப் பெறுவதே
தாய்வயிறு செய்தபாவம்
வருந்துயர முன்செய்த பாவவினை யென்பர்காண்
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே (௯௪)

இவர்க்கிவை யுளவேனு மிவைவேண்டுமெனல்,

அதிவீர னென்னினுந் தந்திரவு பாயமுட
னடையலரை வெல்லல்வேண்டு
மாயிரம் வித்தைகற் றாலுமுலகந்தனி
லடக்கம திருத்தல்வேண்டும்
நதிகோடி தீர்த்திவந் தாலுமோ டந்தனை
நயந்துகரை சேரல்வேண்டும்
ஞானதத் துவமுணர்ந் தாலுமு லகத்தினி
னடக்கைதனை யறிதல்வேண்டும்
துதிசேர் குபேரனென் றாலுமொரு லாபமுறு
தொழிலுட னிருத்தல்வேண்டுந்
துய்யவல்லமையுடைய னெனினுமொருசார்பிறை
றுரைகளைக் காணல்வேண்டுந்

மதியூகி யென்னினும் பெரியர்சொற் கொளல்வேண்டு
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (கூஎ)

இவர்க்கிவை வேண்டாமெனல்.

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதலவேண்டாம்
பின்னொன்று முன்னொன்று பேசியே யவமான
போகொண்டு திரிதல்வேண்டாம்
உற்றவர்கள் போலவுட் பகையான வஞ்சகரை
யொருநாளு நம்பவேண்டா
மொருவருக் கிச்சையாயப் பொய்சொல்லிப்பின்சு
பைபி லூமைபோ லிற்றல்வேண்டாம
சற்றுமே பொறுமையில்லாதவர்கள் சண்டையிற்
றான்போய் விலக்கல்வேண்டாந்
தைரியந் தவிர்க்கிர மாகித்த னென்னினுந்
தன்னையே புகழவேண்டாம்
மற்றொன்று மெண்ணாது செய்யவேண் டாமென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே, (கூஅ)

இவர்க்கிவை பாவமெனல்,

அரசர்வெகு மானஞ்செய் போதகை வருகிலோ
வன்றவிதி பாவமாகு
மானபெரி யோர்பழைமை யாய்வந்த நேயமதை
யகல்வதே தந்தயோகம்
தருகின்ற காரியங் கைகூடி யேபின்பு
தயவில்லை திருகியாகுந்
சற்குண மடைந்துளோ ருத்தமரை முனிவதே
சந்திராஷ் டமதாகுமாம்

கருதிய விருந்தினுட னுண்ணாத் தனியுணவு
காணுமதா வேதார்த்தினங்
கலக்கமே செய்கின்ற வீணைக்காண்பதே
சனைவர்ய வேளைகண்டாய்
மரிசிரத னவந்த காசிபகுலோத்துங்க
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௫௧)

இவர் இத்தீக கோளரவரெனல.

அரைமக்க ளைக்கண்டு தங்கள் காரியமெலாஞ்
சொல்லிச்செய் கின்றவேளை
சொல்லெலாம பொய்யெனவு மிவர்சாட்சி பொய்
யெனவுந் தோன்றுவோ னலமாகும்
திருமுற்ற கல்வியொடு குணமிக்க கவிராஜர்
திரனான ராஜசபையில்
செய்யும ப்ரசங்கத்தி லொருபழுதுசொல்லுவோன்
சென்மத்தி லங்காரகன்
அருளபெற்ற விதரணிக ளைக்காத்த னேகரு
ஞைசரித் தியல்பாகியே
யவாகொடுக்கும்போதி லிடர்சொலி விலக்குவோ
னஷ்டமச் சனியனாகும்
மருவுற றலர்ந்தவம் புயமணியுமார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௫௨)

இது இவ்வாறாயின் இச்சிறப்பிற்றுமெனல்,

தாரணிமன் னவர்சபையின் மெய்க்கின்ற வரிசையே
தனதுபட் டாபிஷேகஞ்
சபாசென்று மெச்சிக் கொடுக்குமதி காரமே
சாம்பிராச்ய போகமாகும்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

## திருவேங்கட சதகம்.

பரிவுட னினைத்தபடி காரியங் கூடிவரு
பதினொன்றி னிற்குருவதாய்
பந்துஜன வர்க்கங்க ளுடனுணவு செய்கின்ற
பாக்யமே கலியாணமாம்
அரிவை குணாநுசிதா தாய்வந்து சேருதா
லன்றமிர்த சித்தயோக
மன்பானபெரியோர்க ளிசைந்துசெய்வதே
யானசுப தினமென்பர்காண்
மரகதம் பூவைமுகி னீலமணி வண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (சக)

மனிதர்களிலே துஷ்டரும் ராட்சதரும் பூதரும் இவரெனல்.

புண்ணியம் பாவமறியார்மாத வஞ்செயார்
புகல்கல்வி நெறியுமறியார்
புனிதரைப் போற்றார்கள் பாதிரவியங்கொள்வார்
புன்மைசேர் துஷ்டராவார்
எண்ணியொரு காரியஞ் செய்பவர்கள் வலுமையா
லெவருக்கு மிடர்புரிகுவா
ரிரக்க மிலலார்பொய் யுரைப்பவர் வஞ்சிப்பவர்க
ளிவர்களராட் சசர்களாவார்
நண்ணியெளி யோர்தமை வெருட்டுவார் வலியவரை
நாடிவஞ் சனையில்வெல்வார்
நாரியர்க ளெவரையுங் கூடுவார் மிகவுண்பர்
நாணமறியார் பூதர்காண்
மண்ணிலொரு மூவடி யிரந்தநெடுமாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (சஉ)

மூர்க்கர் முதலியோரியல்பு,

மெய்யான புத்திபல சொல்லினுந் தன்புத்தி
    மேலாகினென் மூர்க்கனும
மிக்கபெரி யோர்களைத் தாழ்வுசெய் தற்பர்தமை
    மேன்மை செய்வோன்மூடனும
செய்யாத காரியம தெனினும் பிடித்தபிடி
    செய்யுமவனே துஷ்டனுந்
திரளான நன்றிபல செய்தவர்க் கேயிடறு
    செய்பவன் மகாபாதகன்
ஐயாவெலைப்பணிந் தாலுமே சோபம
    டடங்காத வன்குரூர
னனுதினந் தீமை புரி வோனெந்த நாளினு
    மடங்காத சண்டாளனும்
மையார் தடஞ்சோலை திகழ்கின்ற களமூரின்
    மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கை மணவாளனே
    வரதவேங் கடராயனே. (சரு)

இப்படிப்பட்டவன் இவ்வங்க வினனுவனெனல்.

காதவழி யானநதி மாதலந் துதியாத
    கயவனே மீன்மூடவன்
கைதந்த வோலைவா சிக்கமாட்டாதவொரு
    சசடனே மிக்கக்குருடன்
நீதுபெற தன்களவு கண்டவர்க்குத் தாஞ்
    செப்பிலா தவனூமையாந்
செயலான தன்மகதை யொன்றெனினுமறியாத
    செய்கையுடையோன்செவிடனும்
வதெனினு மொருபேர் விளங்காத தேகம
    தெடுக்குமவ னேகுரூபி
யென்றெனினு முன்பாத தரிசனஞ் செய்யாத
    வீணனே பேனென்பார்
மாதுசத்தியபாமை தழுவுமணி மார்பனே
    மணவாளநாராயணன்

மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (சச)

உலோபியர் வகை,

நசைபெற்ற வேதவே தியர்தமக் குதவா
னவின்ற லோபர்க்குநேயன்
நாற்கவி மொழிக்ககவி ராஜர்க்கு மொன்றேனு
நல்கிடான் கொஞ்சலோபி
இசைபெற்ற கீதமுறை செய்பாட கர்க்குமொன்
ரீகிலான் பாதிலோபி
யியலான மட்டுவா சர்க்குமொன் றுதவிலா
னேற்றமுக் காலுலோபி
திசைபெற்ற விகடகவி ராசர்க்கு முதவிலான்
றீயமுழு லோபிநடனஞ்
செய்மாத ரபிநயங் கண்டுமொன் றுதவிலான்
சேர்பரம லோபிகண்டாய்
வசைபெற்ற லோபியர் தங்கள்கண் டறவெண்
மனைவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மஙகைமணவாளனே
வரதவேங் கடராயனே, (சரு)

உலோபியர் வஞ்சப்புகழ்ச்சி,

கண்ட பகையாளிமுன் னின்றுபொரு தாமற்
களத்திற் புறங்கொடுப்பார்
கன்னமிடு கள்வருக் காடையும் பணிகளுரி
காணுமலே கொடுப்பார்
சண்டமா ருதமென்ன வருகின்ற பகைவர்க
டமக்குமனை யுங்கொடுப்பார்
சவுக்கிட் டடிக்கின்ற மன்னர்க்கு வீட்டுத்
தனங்களெல் லாங்கொடுப்பார்
அண்டிவரு மெமதூதர் தாந்தான் கேட்குமுன்
னங்கமுறு முயிர்கொடுப்பா
ரவனிதனை யிப்படி கொடுக்கின்ற பேர்கடமை
யதிலோப ரென்பதென்னே

மண்டலமும் விண்டலமு முண்டகனி வாயனே
மணவாள நாராயணன்!
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௪௬)

உலோபியர் குணமாறாமை,

தேன்கொண்ட தளியொன்றி னாலேழு கடலெலாந்
தித்திக்கவே செய்யினுஞ்
செய்யபூ மலரினால் வச்சிரந் தன்னைச்
சிறக்கவே பொடிசெய்யினும்
கான்கொண்ட மலையெலாங் கைக்கொண்ட வெண்
ணெயாற் கவினுற்ற மெழுகுசெயினுங்
கயவர்க்கு நீதியும பேடிக்கு வீரமுங்
கபடர்க்கு மெய்ஞ்ஞானமும்
ஊன்கொண்ட மூடர்க் கிரக்கமுந் தெளிவுற
உரைத்துநல மேசெய்யினு
மூமை செவி டன்குருடன் முத்தமிழ்படிக்கினு
மூலோபருக் கீவுவருமோ
வான்கொண்ட தேவர்மொழிமலர் கொண்டபாதனே
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௪௭)

மக்களிற் பதராவாரிவரெனல்,

கொண்டகடன் வட்டியுட னன்றுபோற் குணமாய்
கொடுத்து மகிழாதபதருங்
கூறுபிணைசாட்சிமுறி யுடன்மறித் தாலுங்
கொடா தொளிக்கின்றபதரும்
கண்டவுடனொருகோடி சொல்லிப்பி னென்றெனுஞ்
சுருதிச்செ யாதபதருஞ்
சாணுவிட்டினிற பழிசுறி யவரையெதிர்
கண்டுபுகழ் கின்றபதரும்

பண்டொருவர் செய்நன்றி தனையே மறந்துபின்
 பழிசொல்லுகின்றபதரும்
பரமாத ராசையால் வசைகொண்ட பதரும்
 பறந்தாமிக வுஞ்சிதறவே
மண்டிவரு சண்டப்ர சண்டமாருதமான
 மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
 வரதவேங் கடராயனே, (சஅ)

இக்குற்றமுடை யோர்க்கும் இதுசெயல் வேண்டுமெனல்,

சதித்திடும் பகைவரென் றாலுமா பத்தினிற்
 சண்டுதவி செய்யல்வேண்டும்
கல்வியறி யாதசபை யெனினுமப்ர சங்கங்கள்
 கவிராஜர் செய்யல்வேண்டும்
விதித்தமுறை மூடரென் றாலுந்தன் மைந்தர்க்கு
 வித்தைகற் பித்தல்வேண்டும்
வெய்யசின மூர்க்கரென் றாலுநல் லோர்கண்டு
 மேற்புத்தி சொல்லல்வேண்டும்
அதிர்ஷ்டமிலை என்னினுஞ் சலியாமன் மிக்கதொழி
 லதிலே முயற்சிவேண்டு
மாசாத்தியம் தானகன ரோகமென் றாலுமோ
 ரவிஷதம் தீவர்கண்டாய்
வசிஷ்டரொடு வான்மீக முனிதுதி சரித்ரனே
 மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
 வரதவேங் கடராயனே, (சக)

இதினும் இது மிக்கதெனல்,

தினமுந் திரிந்துதனி யாகியே மிகசபொரு
 டேடியே வாழுமதிலுஞ்
செல்வமொடு தந்தைதாய் சுற்றமுங் கூடிச்
 சிறந்துண்ட கூழதிகமாய்
தனதுமரி யாதையொடு பெருமையறியாதபேர்
 தனமாரி பொழியுமதிலுஞ்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.


சமமான மேன்மை தெரிகின்றபெரி யோர்தந்த
தாம்பூல மேயதிகமாம்
கனமருவு பலபல மகாவித்தை சிலசில
கருத்தொடு படிக்குமதினுங்
கருணைபெற வொருவித்தை யாயினுங் குறைவறக்
கற்கின்ற தேயதிகமாம்
மனிதர்சில ரிவையன்றி யவைதிக மென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௯௰)

இதினுமிது வென்றியெனல்,

மிக்கதுளி கண்டுளம் வெருண்டுகலை மானையே
வென்றுசய மாகுமதினும்
வெஞ்சின மிகுந்துசவ ரும்புலி யுடன்பொருது
மெய்கொண்ட வடுவேசயம்
பக்குவமு திர்ந்தபே ரிளமாது கொங்கையிற்
பரிவுடன் சேருமதினும்
பைம்பொன்மணி மாலைபுனை வாலரதி யூடலிற்
பாததா டனமேசயம்
தக்கதொரு கலையறியாத முழுமூடர்
சந்தோஷ மாகுமதினுந்
தமிழருமையறிகின்ற பெரியோர் பழித்ததிந்
தனையதே சயமென்பர்காண்
மைக்குவளை செங்குவளை வாசமலர் களமூரின்
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௯௧)

இதுவிதனை வசப்படுத்து மெனல்,

சிந்தைதெளி கல்வியே லோகவசி யம்பத்தி
செய்வதே தெய்வவசியஞ்
செய்யுமரி யாதையே வித்வசன வசியமாஞ்
செல்வமுற வோர்கள்வசியம

எந்தவித தூர்க்கிரண நலசம்பணங்களோ
பிரடபிலிலை யாதாகிய
மெய்ப்பொழுது மவர்மன தறிந்துகட்டிக்காத்
திருப்பதே ராஜவசியம்
தந்தனன் டனைகளே துஷ்டசன வசியமாக்
தானமே சீதநிவசியஞ்
சாந்தகுண மயமாய் நடந்திடு மொழுக்கமே
சகலசன வசியமாகும்
மந்திரமெ ழுத்தெட்டு பேயுனது வசியமா
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௫௨)

இச்செய்கையோர் இச்சிறப்புப்பெயர்.

கொள்வரெனல்,

சரணென்றடைந்தவர் தமக்குவரு வினையெலாந்
தாங்குவோன் புருஷமேரு
தன்னுடைய செய்கைபோலெவரையும்பார்க்கின்ற
தகைமையோன் றெய்வபுருஷன்
திரணமெனி னும்பிறர் பொருட் காசையிலாத
செய்கையோன் புருஷோத்தமன்
தீராத வினைவரினு மற்பரைப் பணியாத
தீரனே புருஷசிங்கம்
பொருவிலாத் தந்தைதா யென்னினுங்கண்டபடி
புகலுவோன் புருஷரத்நம்
போற்றுமவர் மனதிக் குறிப்பறிந் துதவுவோன்
புருஷநாயகமென்பர்காண்
மரபெலா மிப்படி புகழ்ந்தகுண சேகரன்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௫௩)

இச்செய்கையோர் இவ்வழிபெயர்
பெறுவரெனல்.

சற்றெனினு மொருகல்வி யறியாதகயவனே
தாங்குமுயிர் கொண்டமரமாக
தன்புத்தியன்றிபிறர் புத்தியால் வினைசெயுந்
தகைமையோ னேபதுமையாம
கொற்றவர்கள் பகையாற் றுரத்துண்டு திரிகுவோன்
கூகையுற வானபக்ஷி
கோபமது தந்தையே யன்றிமற் றோரையுங்
கோபிக்கு மவன்பிருகமாம்
கற்றபெரி யோரையெதிர் பணியாதமூடனே
கைகால்முளைத்த சிலையாம்
கண்டவர்க ளெல்லாம பழிக்கின்றகோலனே
சனதுஷ்ட ஜெந்துவெனபார
மற்றவர்க ளேயமது கனவிலுங் காணாத
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே. (௫௪)

கல்விப்பொருட்சிறப்பு.

தெள்ளமுத மனையகல் விப்பொருள் படைத்திடிற்
றேசமெல் லாந்துதிக்குஞ்
செயத்தம்ப மானபுகழ் நிலைநிற்கு மிவையெலாஞ்
செம்பொன்மிகு செல்வமதுபோல்
வெள்ளமது கொளுமெனும் பயமில்லை கனலால
வெப்பவரு சலனமில்லை
வேந்தர்கள் பறித்திடக் கூடாதுசோதரர்
விரும்பினும் சங்குறாது
கள்ளராற் றிருடவும் முடியாது வரவரக்
கனமலாற் குறைவுறாது
கருணைஞா னந்தழையு மாகையா லினியிதய
கமலத்தில் வைப்பதெளிதாம்
வள்ளலென வருகின்ற மாடபூசியரதிபன்
மணவாள நாராயணன்

மணநிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௫௫)

உரைகொண்டு சொல்வரிசை சேர்ந்துபொரு ளின்ப
வகை யோசைபெற் றேமதுரமா
யுற்றநவ ரசமுடன் கற்பனை யலங்கார
முண்டாகியே கவுடமாய்
நிரைகொண்ட சீர்தளை விகற்பம் பொருந்திநன்
னீதியாய்க் கடைதுடிப்பாய்
நிறைகின்ற சபைதனி லுதாரணம தாகிநிலை
நின்றுபழு தென்றிடாமல்
திரைகொண்ட தண்கடலி லருமமுத பாகமாய்த்
தேசப்ர சித்தியாகச்
செப்புமொரு கவிகொண்டு குலமெலாம் வந்தடி
செயினுமது நிசராதுகாண் [மை
வரைகொண்டு பொழியு மழை காத்தருளு மையனே
மணவாளநாராயணன்
மணநிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௫௬)

துந்தீவினைப்பயன்.

திங்களுத யங்கண்டு மலரா திருப்பது
செழுங்கமல முற்றவினையே
தினகரனை யெதிர்கொண்டு முகைகொண்டு வாடுவ
சேதாமபல் செய்தவினையே [து
சொற்குலவு சண்பக சுகந்தமலர்கண்டுமருள்
கொண்டது சுரும்பின்வினையே
கொண்டன்மழை கண்டுளமெலிந்திட வருந்துவது
கோகிலஞ் செய்தவினையே
அங்கணுல கெங்கணு மகிழ்ந்தபெரியோர்களுக
கருளா திருந்துவிடினு
மவர்மீது குற்றமது சொல்வரோசேர்ந்தவ
ரதிஷ்டமென் பார்கள்கண்டாய்

வங்கியந் தருமிசை கனிந்தகனி வாயனே
மணவாள நாராயணன்
மணத்திலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடநாயனே. (௫௭)

அரசர் கவிவாணர்க்குச் செய்யுமுபசாரம்.

போசனங் கந்தமலர் மாலைதாம் பூலம்
பொருந்துவஸ் திரபூஷணம்
புரவியொடு கவிகையுஞ் சிவிகைகரி வாத்தியம்
பூமிதனை தனதானியம்
தூசலவு துவசமெனும் வெகுமான சோடசந்
தூதரால் வரவழைத்தல்
தோன்றுமுன் னெழுதல்வந் தருள்கொளத் தழுவுத
லாதித்திட விருக்கையுதவல்
நேசவெகு மானகன் செய்தெழுதல் வழிவிடுத
னிறைபங்கி காரமேறாம்
நெறிகொண்ட புவிராசர் கவிராசர் பாற்செய்யு
நீதிமுறை யென்பர்கண் டாய்
வாசவன் பெருவிசய னுதனெனு நாதனே
மணவாள நாராயணன்
மணத்திலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடநாயனே. (௫௮)

புல்லர் நல்லோர்குண மறியாரெனல்.

சந்தன வனத்தனி லிருந்துமதன் மணமதைச்
சற்றுமறி யார்கிராதர்
தரளக் குளிக்குமவ ரதன்மாலை யணியார்கள்
சங்குமணி தன்னையணிவார்
கந்தமலி தாமரை யடுத்துமண் டூகங்
கருஞ்சேறு தன்னையருந்துங்
காமருவு தேமாவின் மிசையிருந்தாலுமே மா
காகமது வேம்புறுகருமே
அந்தவகை போலநல் லோர்தமை யடுத்தே
யனேகநாட் பழகிவிடினு

மற்பர்தாமறிகின்ற தறிவதல் லாமற்மற்
றவர்மகிமை யறிவார்களோ
வந்திடி லுணர்ந்தன்றி லவர்பெருமையறிகின்ற
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௫௯)

புல்லரைப்பாடும் புலவர்பயன் பெறாமை.

நாவினிற் சொல்லுநய முங்கண்டு வஞ்சகரை
நட்பென்று வருகேய நம்
கவமதன வென்னவெழிலி கண்டுபேடன் றனை
நாடிவரு மடமாதரும்
காவினி லுயர்ச்சியும் பசுமையும் கண்டிலவு
காத்திருக் கின்றகிளியுங்
கானலைக் கண்டுபுன லென்னவே யாசையொடு
கருதியே யேகுமானும்
பூவினிற் பொலிவுமண முங்கண்டு கேதகை
பொருந்துமே தேடுமளியும்
புல்லர்தஞ் செல்வங்கள் கண்டுதுதி செய்திடும்
புலவர்செய லொக்குமென்பார்
மாவினிற் குயிக்வேண வாவெனுஞ் சளபூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௬௰)

மேலோர்செயல் கீழோர்க்காகாமை.

எந்தவினை செய்தாலு முனிவோர்கள் மாதவ
மிசைந்தாற் பெருமைபெறுவார்
இகழ்ந்தவசை சொல்லினுங் கவிராசர் வித்தையா
லென்றுமிகு மேன்மைபெறுவார்
சிந்தைமத யாவென்று மழவினாத துரைகள்செந்
திருவினாற் புகழ்சிறப்பார்
சீரியர்க ளெப்படி புரிந்தாலுமேற்குமது
சிறுமையோர் செய்ய வசமோ

நீதியாநெறிதப்பி யோடினாலுமது
நன்னைமத யானையென்பார்
நானுமப் படிதவறு செய்யிலோ பேயென்று
நன்றுமுனி வார்கள்கண்டாய்
மந்திசெறி யிடபகிரி தன்னிலுறை வாசனை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௯௧)

இதுஇல்லையாயின் இதுவிளங்காதெனல்.

சந்திர னிலாவிரவு மதுமதியில் லாதகவி
தனயரில் லாதவிசெவருந்
சற்சன ரிலாதவூர் புரவியில் லாதபடை
தளபதி யிலாதசேனை
கைக்கொடி யிலாதமனை பாடலில் லாதவோசை
பத்தியில லாதபூசை
பார்த்திப ரிலாதபட் டணமபூக மந்திரிகள்
பற்பல லாதவரசு
சரமில் லாதமலர் சத்தியமி லாதவாய்
கல்வியில் லாததேகம்
கனவியா தக்கலா சிநேகசுசி யில்லாத
தன்மமுப தேசமில்லா
மந்த்ரமிலை விக்வசன மில்லாதசபையென்பர்
மணவாள நாராயணன்
மதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௯௨)

சங்கீதச் சிறப்பு.

புருவநெறி யாமன்மணி யெயிறுதோன் றுமல்விழி
புரளாம லக்கசேட்டை
புரியசமன் சிரத்தலையை யசையாமன் மிடறுவான்
பொருமிவிம் மாமலியல்பாய்ச்

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

## திருவேங்கட சதகம்

அருதிலை கரணுனை தீதியொடு வீணையின்
றொனியினை தப்பிரமமாய்த்
துய்யதக் கிரியோசை பட்டெனுசையென வோட
தோன்றும வின்பமயமாய்த்
தருமதுர வமுதரச பொழிருசார விகளப்புரு
சங்கீத வித்தையென்றல
சகலர்க்கு மானந்தமா சுமது பாடுமவன்
சாசுணா வஞ்சிவெனிலை
மருவியிதழ் பாருகியனை யாமனுயி குஞ்சுபோ
மணவாள நாராயணன்
மணதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங கடாரயனே. (௧௩)

### பரதச் சிறப்பு

பரதாள முஞ்சுதி யடக்கமிகு தொனிசெயும்
பண்புபெறு வோன்மத்தளி
பாராக கீதமொடு தாளங்கொள் கனவிதம்
பாடுவோ னேபாடகன்
கரதாள மேன்மனமு கடைய தத்தின்மேற்
கண்ணுமுடை யோனட்டுவன்
கையின்மேல் விழியுமக் கைவிழியினலனயங்
காட்டுமவ ளேபாத்திரம்
சுரதாள லயமார்க்க மாகுமிக் கிதபதஞ்
சொல்லுமல வேரிசனைந்
துதிபெற்ற நடனப்ர சங்கமதில் வேறுதொனி
தொனியாத சபையேசபை
வரதாள முடனாவி னடனமிடு பாதனே
மணவாள நாராயணன்
மணதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடாரயனே. (௧௪)

### நாடகச் சிறப்பு

சுகந்தபரி மளவஸ்த்ர பூஷணாலங்கிருத
சோடுமஸ் தீபுவேண்டு

தோகையர்க ளும்பரி சனங்களுங் கூடியே
சொற்படி நடத்தல்வேண்டும்
மிருந்த ரஸ்தாளிக் கரும்புதேன் முதலான
மேன்மைபோ லின்பரசமாம்
வேஷங்க ளங்கமுஞ் சாதியும் பாஷையும்
வெவ்வே றிருத்தல்வேண்டும்
புகழ்ந்தபய மிங்கிதம்பரிகாச விகடங்கள்
புண்ணிய சதாப்ரசங்கம்
போற்றுபா வணைமிகு ராகதா ளஞ்சுருதி
புகழ்கின்ற பரதநடனம்
மகிழ்ந்திடுஞ் சபைதேவர் சபையென்று சொல்வர்கா [ண்
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௯௫)

## விநோதவித்தைச் சிறப்பு

சத்திகண பதிதுர்க்கை சரஸ்வதி மாகாளி
சாமுண்டி யென்றுவாழ்த்திச்
சங்கமொடு ஜயகண்டி டக்கைகைத் தாளங்கள்
சத்தமொடு மிகமுழங்கச்
சித்ரமிகு மாத்திரைக் கோலின்முறை யங்கமுறை
செப்புமறை பத்துமுறைகள்
செய்யுமுறை யறுபத்து நாலுகஜ கரணங்கள்
சேர்ந்தகோ கரணமார்க்கம்
வித்தைபுரி ஸ்தம்பனந் தாதியா மஷ்டாங்க
விதமாம யேந்த்ரசாலம்
மிகுமந்த்ரசாலமுத லானசெப் பிடுவித்தை
மேன்மையவர் தந்த்ர நீதி
மத்தகச ராசதே வேந்த்ரனுந் தேவனே
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௯௬)

### பௌராணிகர் முதலியோர் சிறப்பு.

ஆருக்குமானந்த மாகவேபொருள்சொல்லு
மவனே புராணிகபுண
னக்கமொடு கிரகநிலை கணிதமுந் தெரிகுவோ
னருள்புரோகித பூசுரன்
சீருற்ற சபையெலா மெச்சப்ர சங்கமுறை
செப்புமவ னேவித்துவான்
செய்யுமர் கிரியந்த்ர தந்த்ரமொடு
சிலனே மந்த்ர வாதி
ஏருற்ற கல்விகுண மேன்மையோ தங்க
ளிசையுமவ னாசாரிய
னென்றுமவர் சொற்படி நடந்துபய பக்தியொ
டிருக்குமவ னேசிஷ்யனம
மாருக்கு வேதாந்த வாசனே நேசனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கையணை வாளனே
வரதவேங்கட ராயனே.

### மருத்துவனியல்பு,

திரமான சாஸ்திர முணர்ந்தொரு சிகிச்சையது
செய்திட வழைத்தபின்போய்த்
தேசகா லஞ்சாதி தேகங் குணம்பிணி
சிறக்குமா றுந்தெளிந்து
கரமான நாடிமுத லெட்டுப் பரிட்சையுங்
கண்டுகலி தங்கியாமுங்
கனகுளிகை பஸ்பமோ சிந்தூரஞ் சூரணம
கருதுலேகிய தயிலமொம்
பரமான நன்மருந்துங்கொடுத் துசிதமாய்ப்
பத்தியமு வெளிதாகவே
பரிவுபெறு மாரோக்கி யஞ்செய்து திரளாசை
பகராத பண்டிதனெவன்
வரமான தன்வந் திரிக்குநிகர் சொல்வர்காண்
மணவாளநாராயணன்

மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்கடராயனே. (௬௫)

ஈனர் மருந்துவனுக்குச் செய்யுமுறைமை,

சேர்க்கின்ற கனரோக முற்றால் வயித்தியன்
றெய்வமாங் கேட்ட தெல்லாந்
தரள்கொடுப் போமென்பர் தீருமிப் பிணிவியான்
செப்பிறு னென்றுருவாய
பகர்க்கின்ற குளிகையது தந்தபின் தந்தையாம்
பாதிலுருவான பின்பு
பணபான துணைவனு ரோக்கியஞ் செய்தபின்
பகர்கின்ற மைத்துனனுமாம்
ஏக்கின்ற மற்றைநா ணேயன்மறு நாளினி
லிசைக்குகட னளிமறுநா
ளெதிர்வரிற் பகையாளி யாகுமிப் படியென்று
மீனர்சில ருண்டுகண்டாய்
வார்க்கின்ற தானமொடு வளர்கின்ற வள்ளலே
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே, (௬௬)

ஆராயாதுசெய்யு மொழுவரடையுங்கதி,

நீதிவழு வாவகை வழக்குரைப் போர்களு
நிறைந்ததீ வினைகளெல்லா
நீக்குபரி காரமுறை செய்குவோ ருப்பிணி
திருத்தவறுப் பண்டிதர்களும்
சோதிடஞ் சொல்லும்பு ரோகிதருமுலகந்
துதித்த செங்கோல்வேந்தரும்
தூயவுப தேசதே சிகருமவர் சீஷருஞ்
சொல்லுமிவ ரெழுபேரும்
ஆதிமறை நூலுரை செய்தவித மாராய்ந்
தறிந்துதெளி யாதுசெயிலோ
வடைக்கலப் பொருளைக் கவர்ந்திடும் பேரிலு
மகோரநர கடைவர்கண்டாய்

மாதிர நெடுங்கடல் வளர்ந்த நெடு மாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே, (௰)

நித்தியகருமச் சிறப்பு

கருணைநதி மூழ்கியே சந்தியாவந் தனமுடன்
கருதுஜப தபவோமமுங்
கடவுளோர் பூசையுஞ் செய்து வேதாகமங்
கல்வியது முறைபடித்துத்
தருமத் தியானநற் கருமமா நீதியொடு
தந்தைதாய் புத்திரருடன்
றுணைவு செய்தாரா மாயணம்
சந்தியொடு கருமநண்ணி
பரிவுடன் றிருக் கோயில்வல மாகிப்
பணிந்துபத சேவைசெய்து
பணபான சந்த்ரோ தயத்தின்ம லரணைமீது
பாரியுடபண மகிழ்ந்து
மருவியே வாழுமில் வாழ்க்கையே வாழ்வுகாண
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௧௧)

குடிவாழ்க்கைச்சிறப்பு

மிக்கதெய் வத்தலமு ஞானகுரு பீடமும்
விளங்குமா நதியுமறை யோர்
மேவிய கிராமமும் பூமிநல முந்தனமு
மேலரசு முடையநாட்டில்
முக்கனி தருஞ்சோலை நீர்வளங் குடிவள
முயங்குபயிர் வளமுமுள தாய்
மொழிந்தநாற் குலமுஞ் செழிப்பதாய்த் தேர்வீதி
முதலாய் விளங்குமூரில்
தக்கதொரு வீதியொரு பாணிவி சாலமாய்ச்
சார்ந்த சிங்காரமனையிற்

றனதானி யங்கறவை முதலான செல்வந்
தழைத்தென்ன தானமுதவி
மக்கண் மரு மக்களொடு வாழ்வதே வாழ்வுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௭௨)

மருத்துவர் செல்லத்தகாவிடங்கள்,

தீராத ரோகமுண்டே யோரிடமு முண்மையது
செப்பாத பொய்யரிடமுஞ்
சீரான வொருவர்பண் டிதமன்றி வெகுவிதஞ்
செய்துகொள் வோர்களிடமும்
வாராத கோபமுறு மூர்க்கமன் னவரிடமு
மேந்திமையை மனதறியா
வின்பமக மதிவிரக மானகா முகரிடமு
மெப்படி நலஞ்செய்யினும்
காராத லோபரிட மும்பத்தி யத்தனைத்
தாழ்வுசெய் வோர்களிடமுஞ்
சகலசன கண்டக ரெனுந்துஷ்ட ரிடமுமிகு
தனமாரி யேபொழியினும்
வாரா திருப்பதே பண்டிதர்க ணீதிகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௭௩)

நோய்க்கிடங்கொடாதவர் செய்கை,

சனிபுதன் றனிலெண்ணெய் வெந்நீரின் மூழ்குவார்
சாருமிள வெயில்விரும்பார்
தம்வயதின் மேலான மங்கையைச் சேரார்
சதாகாலம் வழியினடவார்
பனியிலுங் காற்றிலும் மெய்வருந் தார்மடைப்
பள்ளியிற் சேராகமிராத்

# திருவேங்கட சதகம்,

பழங்கறி யருந்தா ரிரண்டடக் காரமொன்று
பலகால மூட்விட்டிடார்
சனியொடு கிழங்குகள் மிகுக்குபுசி யார்பசி
கலந்தன்றி புணர்வுசெய்யார்
சாய்ச்சபா லுண்பார்கீரை மோர்கூட்டு வார்தினங்
காவேரி தனின்மூழ்குவார்
மனிதரிவர் பேர்சொன்ன பேர்க்கு நோய் சேருமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௭௪)

தாதைமுதலியோராவார் இவரெனல்,

நிலமுடன் றுரகமுஞ் செலவமுந் தந்துகட
னிலுமையொன் றில்லாமலே
நிறைகல்வியுமைசெய்து நெறியொடு வளர்க்கின்ற
நேசனே யுயர்தந்தையாம
கலைமதிய மெனவே வளர்த்தபின் செல்வங்கள்
கண்டுமிக மனமகிழ்ந்து
கருதரிய புத்திரன்போலமரு மகளையுங்
கருணைசெய் பவளன்னையாம்
பலகலை யுணர்ந்துமிகு செல்வமுந் தேடிப்
பகிர்ந்துதன் பேர்விளங்கப்
பண்பான தந்தைதாய்க் குதவியே யவர்சொன்ன
படிசெய்கு வோன்புத்ரனும்
மலர்பொழி செழுஞ்சோலை மலைவளரு மாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே, (௭௫)

நற்புதல்வ னியல்பு,

அரிதான மாதவஞ் செய்கின்ற முனிவோ
ரடைந்திடுவ ரந்தனைப்போ

லடுத்தவர் தமைக்காத்த மிக்கமே லவாதமை
யடக்குமுன் சக்கரம்போல
பெரியோ ரிருக்கின்ற சபையினிற் கவிராஜர்
பேசம்ப்ர சங்கமதுபோல்
பேருலகை மெய்க்கொளு மனுநீதி முடிவேந்த
பெறுகின்ற மாகீர்த்திபோல்
ஒருகோடி நட்சத்திரங்களூ டனடுவே
யுதிக்கு சந்த்ரோதயம்போ
லாயகுல சுத்தனும் பகீரதன்போலவே
யொருபிள்ளை போதுமவனால்
மரபெலா நன்மையே யடையுமென் பார்கள்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௭௮)

சகோதரவொருமை

தனதுபட் டந்தனைத் தம்பியர்க் கீயெனத்
தந்துமகி ழுந்தமையனுந்
தமையனார் வருமளவு மாவிரத மாகவே
தபசுபுரியுந் தம்பியும்
கனந்தனைப் பாலித்த தாய்தனைப்போலவே
கருணைசெய திடுமதனியுங்
காணுமுன் றந்தைபோற் றிருவடிகள் பணியுங்
கனிட்டனிட மனையாட்டியும்
தினந்தினம் பரிவாகியம்மையே யென்றுபேர்
செப்புங்கொழுந்தனுஞ்
சேர்ந்துவாழ் கின்றபேர் திரேதாயு கந்தனிற்
றெசரதர் குமாரர்கண்டாய்
வனசமலர் கமழ்கின்ற வாவிசூழ் சளபீரில்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௭௯)

## வேட்டகத்தியல்பு.

காரிகை தனைத்தந்த மாமனார் மனைதனிற்
கருணைமரு மகன்வந்திடிற்
கண்டவுட னாசார வுபசாரமாகவே
கனவிருந் துசெய்சமைப்பார்
சேருநாண் மூன்றுதி லமைபட் சத்திர்
செனித்தசந் திரோதயம்போற்
றினந்தினம் பெருமைகுறை யுங்காரி யங்களுடி
செய்யென்ப ரத்தைமுதலோர்
ஆருமெண் ணார்கண்மைத் துனர்சாச பரிகாச
மதிகமா மனைவியெளிலோ
வன்புடன் சொன்னபடி கேளாளி தாகையா
லாதியொரு கதையல்லவோ
வாருமென் றவரோக வசனமுஞ் சொல்வர்காண்
மணவாள நாராயணன்
மணிதிருவுறை மார்பேறு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (எஅ)

## மானங்கெட்டுப் பிழைப்பவரிவ ரெனல்.

கொசமுறு சிறுமிதனை தறவிஞன் மருகன்மனை
யில்லையென் றுவாழ்ந்தபேரும்
நேரிழை தனைத்தந்த மாமனா மனைதன்னி
னீங்கா திருந்தபேரும்
பெரிய கல்விதெரி யாமூடர் பேரிற்ப்ர
பந்தகவி சொன்னபேரும்
பெருமைபோய்க் கள்ளக் கடன்களேபட்டுப்
பிழைத்துயிர் சுமந்தபேரும்
ஏசவரு பகையாளர் தங்கண்முன் கைகட்டி
யேவல்செய இன்றபேரு
மீனமது பார்ப்பரோ வயிறுசா ணன்றிவர்க்
கெண்சாணு வயிறுகண்டாய்

வாசமலர் மங்கைகுடி கொண்டுவளர்களமுரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௭௧)

## கற்புடைப்பெண்டிரியல்பு.

ஒதுஜப பூசைகட் கினியதற் றேவல்க
ளுகந்துசெய் போதுதாதா
முறைகொண்ட சரசஞ்செய் போதுமன்மதனு
மொழிந்தவே ளாத்தெய்வமாம்
நாதனைக் கருதியவ னுண்டதுறை யமுதாக
நவில்வதே யுபதேசமாம்
நதியாடல் பலநோன்பு தேவதா தரிசனை
நயந்தபலவிரதமுமவன்
பாதசரி சனமாக்கொள் சத்தியாய்ப் புத்தியாய்ப்
பத்தியாய்க் கடலினும்
பாரென்று கனவிலுமறை செய்கிலுஞ் செய்கின்ற
பதிவிரத மார்க்கமான
மாதர்புகழ் நீதியே தழிபெற்ற நல்லவோ
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௭௨)

## நற்பெண்டிரியல்பு.

பஞ்சணையி னருகாக நின்றுவா வென்றபின்
பரிவினுட னருகில்வந்து
பாக்கிலை மடித்தகரு ளீந்துமெத்தையிலவந்து
பரிமள மிகத்திமிர்ந்து
கொஞ்சியலர் சூடியிசை பாடிவிளை யாடியே
கொக்கோக விதமறிந்து
கூடியித ழிருவோரு முறைபருகி யினியபுட்
குரலோசை மிகமுழங்க

நெஞ்சமகிழ் வொடுசூாத சாணசுரி கரவுபரி
மேயாதி கேளிதன்னுலு
நிறையமிர்த போகசம் போகவை போகமுட
னீங்காத யோகமுதவும்
வஞ்சியின லாதுமனம வெறுன்றின் பகிழ்மோ
மணவாள நாராயணன்
பணதிருமறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௧)

தீப்பெண்டிரியல்பு.

ஐயருக் கமுதபடை யென்றவன் ராய்பேயு
மாண்பிள்ளை யென்றெண்ணமோ
வரிசியென் சோபானை சட்டி யெகமேயென்ப
ளவன்சொன்ன வகைகளெல்லாம்
பையவே சொன்னவந் தானுஞ் சமைக்கப்
படாததலே நேராகுதென்று
பாயிற்கிடப்பன்னை மாயொன்ற பேசினலு
பாருனக் கேற்றபுத்தி
செய்ய வல்லேனென்பள் சற்றடித் தானஞ்ச
தின்கிறேன் கூகூவெனத்
தெருவீதி தோறுமுறை யிடுபெண்டி ருண்டெனிற்
றீயநமன் வேறுமுண்டோ
வையகம் புகழ்சோலை மலையலங் காரனே
மணவாளநாராயணன
பணதிருமறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௨)

பரத்தையரியல்பு.

கொச்சியுறு மஞ்சள்வங் காணமுறு பச்சைநிறவ
கூறுசாண் பகவொட்டுடன்
கூடிய நலங்குவஞ் சனமாடி பொற்கண்டை
கொண்டவெண் டுகிலுடுத்துக்
கச்சினங் கொங்கைமேற் கந்தபரி மளகளப
கஸ்தூரி குழுகுமென்னக்

கனகநவ ரத்னமய பூஷணம் பூண்டுகிளி
கையின்மினை யேந்திநலமாய்
பச்சைமயில் போலவிந்து நினைக்கு மிகுசரச
பரியாச நகைபுரிந்து
பண்பான மேடையுப் பரிகையினிற்கும்
பாத்தையுண் டாவலென்றால்
வச்ரதர னுலகத்த ரம்பையினு மதிகமா
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௩)

பிரௌடை வேசையியல்பு.

ஆசைபட வொருமிகே புருஷன்வந் தாலமிகவு
மாசார வுபசாரமா
யாசனந் தனிலெழுந் தருளுமென் றருகிருக்
தழகான வொரு கட்டிலே
நேசமொடு தாம்பூல முதனியே யவனுடைய
நெறிகண்டு வரவழைத்தா
நீரியா யந்தநாள் வந்தீர் பின்னெனை
நினைத்திலீ ரென்கோலென்று
பேசரிய சங்கித சரசசல லாபப்ர
சங்கமொடு ரதிக்கனியில
பிரியமுட னேயனைந் தின்பமா யுசிதம
பெற்றிப்ரௌடை வேசையென்பார்
சமிகு பைந்துளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௪)

பாத்தையரிழிவு.

விலைமாதர் வீடுசவு ளிக்கடை படுக்கையது
மேருமலை பொதுவம்பலம்
மெத்தையது சந்தியிற் பாறையவ ரங்கமோ
மேவிய படித்துறையதாம்

கலைமருவு மரவைது மேலாடமா மிருகொங்கை
கடையிலெனு மிசைமபுற
கனிவாய் படிமயிரு துடைகடன்னீ யபங்க
கட்டுகத விக்கயயமாம
முலைமாய வாடையைக் துகிலிடையிடை யேயணியமார
மோகமென் மெட்டிக்கரி
மொழியுயற் சொரம்புசே ரினடுவென கீரமை
முறைமையிவை கண்டிருந்தும்
மலைவுபெறு வார்களவர் வார்த்தைகத கேட்டீரோ
மணவாள நாராயணனை
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௯)

சரீரநிலையாமை,

ஆகாய மீதினி லெழிற்சிலை காற்றினை
யடைத்துவைத் திடுகருத்தி
யனலிட்ட மெழுகுவெயி லிடையிட்ட வெண்
ணெய்சுழி யாறிடை மெழுக்ககுமிழி
மோகா விகாரமொடு வருகின்ற மின்னல்விழி
மூடுதுயில கண்டகனவு
மோதிவரு காற்றினிற் றீவிழுந் திடுபஞ்சு
மூச்சோடு கின்றபதுமை
மீகாமனில்லாத கப்பலகண் ணிமைபோல்
விளக்கவரு தேகமிதனை
மெய்யென்று பெய்யெலாம் பொய்யென்றுதிரிகின
விழலனெனை யாளநினைவாய் | ற
மாகாள முகிலனைய மெய்யனே துய்யனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங கடராயனே. (௯௰)

நலவினைசெய்வோர்பேறு.

ஓதுமா தாபிதா குருதெய்வ விசுவாச
முடனதிதிபூசைசெய்வோ

சுற்றபர தாரசோ தரமாகு வோரகித
மொருவர்க்கு மெண்ணிலாதோர்
பூதய வுன்னோர்சகாயமே புரிகுவார்
பொய்பிலா வாய்மையுடையோர்
பூர்வமாம் தருமபரி பாலனம் பண்ணுவோர்
பூஞ்சோலை நந்தவனமே
பாதையிடை மண்டபங் கூடந் தடாகநீர்ப்
பந்தர்முத லாய்ப்புரிகுவோர்
பண்பா யிவர்க்குமலை போல்வந்த வினையெலாம்
பனிபோல நீங்கி நலமாய்
மாதவ முகுந்தனுன் பாதமே பெறுவர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௭)

## மாதர் அவயவமயக்கு.

சிக்குமிக வேநாறு கின்றகுழன் முகிலென்பார்
திரளுத்தை மாறுதவாய்
செம்பவள மென்பர்சனி கொண்டுநீர் மாறாது
பருநாசி குமிழதென்பர்
பக்குவம தன்றிவிழு கின்றமுலை யானைதோற்
பையைமக மேருவென்பர்
பாராத நாகத் துவாரமாங் குழிதனைப்
பகரின்ப வாரியென்பார்
மிக்குவரு ரத்தமுஞ் சீயுமென் புமபோர்த்த
மேனிமலர் மாலையென்பா
மீளாத நாகந் தருஞ்சிறிய வின்பமதை
பேரின்ப வீடென்பரிம்
மைக்கருங் கடலின்வினை வீழாம லாளுவாய்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௮)

## நீதியின்பெருமை.

வித்தையே செய்திடுங் குருமீட மொன்னலரை
வென்றுவரு கின்றதனவாய்
மித்திரர்கள் பகைவரா மேவலாக ணையரா
விக்கைபுரி தாருடைதி
புத்திரல மேசொல்லு மதிமந்த்ரி யாவரும்
புகழ்கின்ற வசியகுளிகை
புளகமுலை மாதருக் கதிரூப வின்பம்
பொருந்தவரு காமதேனு
நித்தலும் பெருமையே செயுமாசு தான்மொழிபு
நிலைசெயத் தக்கசூத்ரம்
நேர்ந்தபடி யென்கின்ற வாதங்க கேசரி
நினைத்தவெல் லாங்கொணர்ந்தே
வைத்திடுங் குலதெய்வ நிதியன்றிவேறேது
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (அசு)

உயர்ந்த பொருளிருக்கு மிடத்து இழிந்த
பொருளிருக்கு மெனல்.

கோகனக மலர்மலங் துறுகின்ற வாவியிற்
கொட்டியு மலர்ந்திருக்குங்
கோகிலங் தொனிசெயுந் தேமா வனந்தனிற்
கூறுவாய்ப் பக்ஷியுறையும்
ஏகமென வுலகம் புரந்தமன் னவர்சபையி
லீனமன் னருமேவுவா
ரிலகுமா ணிக்கங்கள் விற்கின்ற கடைவீதி
யிற்பாலை மணியும்விற்பார்
பாகனைய மதுராச லளிதப்ர பந்தகவி
பாடுமன் னவாகள்சபையில்
பழங்காடி தனிலும் புளித்தபுன் கவிசொலும்
பாவலரு முண்டுகண்டாய்

மாதனைக முறையுமொரு மணியணியு மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. (௯௰)

சேர்ந்தவினத்தின் குணம்பெறுவோர்.

பெருதோ ரிவரெனல்.

சோதி நவரத்னமணி மாலையிடைநூலுந்
துலக்குமணி யாய்விளங்குஞ்
சுவைப்பழந் தனுடன் சேர்ந்தசெம் பொன்னுந்
தூருபபோ லேமிதக்கும்
வீதிபெறு குப்பையி லிருந்தாலு மாணிக்க
மெய்ம்மழுங கா தொளிவிடும்
மிகவுஞ் செழுந்தேன் சொரிந்தே வளர்க்கினும்
வெள்ளுள்ளி நாற்றமாறு
தாதலாற் சேர்ந்திடு மினங்களைப் போலவே
யவனியி லிருப்பர்சிலபே
ரார்சொல் லினுந்தங்கள் சுயகுணம்விடாமலே
யமைவற்று வாழ்வர் சிலபேர்
மாதர்தூகில கொண்டாரு குருந்தேறு மாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்பேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே, (௯௧)

வல்லோர்க்கும் புல்லோரால் தாழ்வுவருமெனல்.

பாராசர் வச்ரமகுட ந்தகர்த்திடுசத்தி
பஞ்சமெர்ஜைக்கு நாலும்
பணிராசர் மணிமுடிகள் சிதறநட மிடுதோகை
பச்சோந்தி யானடுங்கும்
காரரச மார்த்தாண்ட சந்திரகிரணங்களொரு
கட்செவியி னுன்மறைபடுங்
கனதைபுரி விகடதட மத்தமாதங்கமொரு
கனல்சிறிது கண்டுபயமாம

அரராச கங்காப்ர வாகநிக ரூற்றுமொரு
துய்யசிலை யான்மறிபடுஞ்
சொலகின்ற பெரியோர்க ளொன்றானு மற்பராத்
ரேக்கிகொடு முறிவர்கண்டாய்
வரராச தசரத மகாராஜ புத்ரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௯௨)

நல்லோர்புகழ்நிலைபேறு.

விசயன்மனு வுடனிட்சு வாகுகுச நாபன்
விகுட்சிகு காகுஸ்தனும்
மிருமம்ம ரீஷன்மாந் தாதன்முசு குந்தன்
விசாலனே திரணபிந்து
சசிபிந்து வொடுதிலீ பன்னரிச் சந்திரன்
சர்வதா மன்பாதனே
சந்தனு நளன்சத்ய விரதன்ப கீரதன்
சகரனொடு தானகர்னன்
தெசரதன் புரூரவன் சென்னியே
திரிசங்கு வுடன்யயாதி
சித்திரசேனன்வீர சேனன்ருது பனனிந்திர
சேனன்விது ரன்பாண்டவர்
வசிதேவ னாதியோர் புகழன்றி நின்றநிலை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௯௩)

தீயோர் பழிநிலைபேறு.

சூரனொடு பானுகோ பன்றிரி புரத்தினோர்
தாரகனே மதுகைடவர்
அந்தமகிடாசுரன் சப்பர சலந்தரர்
தூஷணன் றிரிசிரகரர்

வீரரா வணகும்ப கர்ணனிர் திரிசிரத்து
மிகுகனக னிரணியாட்சன்
வெய்யவா தாபிவில் லவனுடன் சூர்ப்பனகை
மேவுசமுகி தாடகை
காருலவு சிசுபால தந்தவக் கிரர்சரா
சந்தனொ டடல்கீசகன்
சகுனி துரியோதனன் கஞ்சன்முத லாயினோர்
தங்களப கீர்த்தியல்லால்
வாரிசூழ் புவியிலவர் கொடுமையிலைநின்றதோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௯௪

வானப்பிரஸதன் முதலானோரியல்பு,

ஒருபொழுது மவமே பிராமணற் கருமங்க
ளுணர்வுடன் செய்துமனையா
ளொடுகாம மின்றியுன் பாதங்கள் போற்றிவன
முறைவன்வான ப்பிரஸ்தன்
கருமமுட ஞானதுபக வற்கீதை துதிசெய்து
காமமுத லாறுமொன் றுங்
கருதாம லொருபோது சுவைநீக்கியேயுண்ட
கருணையோன் சந்நியாசி
இருவினையு மவைசெய்த துஞ்செயச் செய்வது
மின்பமுங் கனதுன்பமு
மெண்ணரிய சாதிமர பும்பலவு முன்செய்கை
யென்றெண்ணி யடிகடொழுது
வருமவனை யமனுத மெய்ஞ்ஞானி யென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௯௫)

உத்தமர் முதலானோரியல்பு

வினையாட லன்னமுஞ் சுகமுமே தேமுமென்னை
விச்சைதபுரை தன்னையறிவார்
மிருதாழை சற்பகங் கன்னன்மலர் போன்மரபு
விதமாய் விளங்கவருவார்
பனையிரெண்டு னாளிகேரங்கமுக மென்னவே
பரிந்தவர்க் கன்புகூர்வார்
பனசமுஞ் சூதமும் பாடலமு மென்னவே
பண்பினுட னுதவிசெய்வார்
சினமாதவி னீரொழுத் தொடுமண லெழுத்துடன்
சிலையெழுத் தெனமாறுவார்
செப்புமிவர் தமையாதி யந்தமாப் பார்க்கவே
சிந்தைதனி லாய்ந்து புவிமேல்
மனிதருத் தமர்க்ண்மத் திமராதமர் மூவர்காண்
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௯௪)

தேசங்களின் பெயர்கள்,

அங்கமத் திமாள வஞ்சாள வங்கேக
யாரியம் பாரசீக
மாந்திரம ராடமே கன்னட மிடங்கண
மவந்தியொடு சேதிகுருதம்
கன்னைகதிகழ் காஸ்மீர மச்சங் கிராடங்
கரூசமே சூரசேனங்
கலிங்கமொடு வங்காள நேபாளசிங்களன்
கனத்ததுளு வங்கேரளம்
கொங்கணம் போடந்திரி கர்த்தப்புளிந்தங்
குளிந்தகிராடமகதங்
கூர்ச்சரம் பப்பரம்வி தற்பகாம்போஜநற்
கோசலஞ் சிந்துகௌடம்

வங்கமும பணிகின்ற கருடகிரி வாசனே
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௬௭)

தேசமுதல் அண்டமளவாக நிற்குதிலே,

ஒட்டமுறுசாதகஞ் சவ்வீரபாஞ்சால
மோங்குகிட தங்கடார
முகந்தாஞ் சோனகஞ் சீனகாந் தாரமோ
டுலாவுமலை யாளவங்கம்
இட்டமுறு த்ராவிடஞ் சோளபாண்டியமாதி
யெண்ணேழு தேசமாகி
யிலங்குபர தக்கண்டமாதிநவ கண்டங்க
ளேய்ந்தசம் புத்தீவுமே
அட்டதிசை பெற்றதீ வேழுபூ லோகமிகு
தாதிமே லேழுலோக
மதலமே யாதிகீ ழேழுலோகங்களிவை
யவையுமீ தோரண்டமாம்
மட்டிலா வண்டங்களுன்றிரு வயிற்றினுறு
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௬அ)

பதினெண் கணங்களிவை யெனல்,

தேவருடனசுரர்கள் சித்தர்க டயித்தியர்
சிறந்திடும் புருடர்கருடர்
செய்யகந் தருவர்கின் னரரிராக் கதர்பூதர்
தீதிலவே தாளர்முனிவோர்
மேவுவிஞ் சையருரக ரந்தர ரியக்கரோ
மேலுமா காச வாசர்
மிகுபோக பூமியோர் முதலாய பதினெட்டு
விதமான கணநாதரும

பூவையர்க ளுங்கண்டு துதிசெய்யுந்திருமலை
புகழ்ந்துகோ னேரிமூழ்கிப்
போற்றியுன் சந்நிதி வணங்கியே துதியாத
புன்சனன மூஞ்சனனமோ
மாவலி பணிந்தசெம் மணிமகுட பாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே. (௯௯)

பரமபாகவத ராவாரிவரென்னல,

சுகனொடு வியாசன் பராசரனொடு சவுனகன்
றுய்யநா ரதன்வசிட்டன்
துங்கவான் பீஷ்மா வலிருக்குமாங்கதன்
சுக்ரீவன் மாருதி
தகுவிடசு வாகுலீ டுமனுடன் பிரகலா
தனொடுகுசே லன்விஜயனே
தருமனொடு முசுகுந்த னக்குரூரன் மணி
ஜடாயுவுட னம்பரீஷன்
அகலிதிரி சடைமாது பாஞ்சாலி சபரிமூ
னழைத்திடக் கஜராஜனே
யதிராமா நுஜன் றிருவரங் கத்தமுத
னாழ்வார்கள் பன்னிருவரும்
மகிமைபெறுமுன்றொண்டர் பாதமே துணைகொள்ளு
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௱)

அடியார்க்கு வருஞ்சிறப்பு.

உனதுபா தம்போற்று மடியார்கள் சிந்தையி
லுவந்துநீ யென்றுமுறலா
லுன்னுடைய திருமாத ரென்மருஞ் சேர்வரவ
ருற்றதா னிதிகள்சேரும்

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY



# திருவேங்கட சதகம்,

கனிதிகள் சேர்ந்திடத் தனதன்வரு வானுடன்
கருணைபுரி நேயன்வருவான்
காதல னடுத்ததா னுமைவருவ ளன்னையாற்
கந்தன்வரு வன்மருகனுல
தனதுமா மன்வருவ னரசன்வர லாலமரர்
சகலருங் கண்டுவருவார்
தருமஞ் செழிக்குமருள் சேருமதுவன்றியே
தவமொன்று செயல்வேண்டுமோ
வனசரோ ருகமலர் மடந்தைவளர் களமூரின்
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௱க)

---

அவையடக்கமும் பேரர்க்கனையும்,

ஒருமலை யெடுத்துமதை காத்தவா மனைதேவ
ருபயபத சேவைதனையே
புனங்கொண்டு வெண்மணியில் வாழமுத் தாமைய
னுதவநா ரணபாரதி
பொருமலை பொருங்கனகை புங்கானியாறும
பொருந்துகடல் பொற்புலவர்கள்
புகழ்ச்சபையி லெனதுவேங் கடசதக நீதிசெறு
புகலைவரு றாறாகவியும
பரிவினுட னினைவருக கேட்டியன் றமிழின்மேற்
பக்ஷமவைத் தாளவருவாய்
பாலகன் புன்சொல்லைக் கேட்டுமே மகிழுமவள்
பாரமீதி லன்னையலவோ
வருபவர் களிகனல் வாழுத வநேயனே
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௱௨)

திருவேங்கடசதகம்-முற்றிற்று,